ஆப்பிரிக்க நாடுகள் வரிசை

# மேற்கு ஆப்பிரிக்கா



'சோமலெ'

ஆப்பிரிக்க நாடுகள் வரிசை—7

# மேற்கு ஆப்பிரிக்கா

'சோமலெ'

பாரி நிலையம்
59, பிராட்வே - சென்னை-1.

முதற் பதிப்பு : டிசம்பர், 1968.

உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூ. 0-75

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14,

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மேற்கு ஆப்பிரிக்கா | .... | 4 |
| சிரா லியோன் | .... | 5 |
| லைபீரியா | .... | 35 |
| செனகல் | .... | 46 |
| கினி | .... | 48 |
| போர்த்துக்கீசியக் கினி | .... | 50 |
| ஐவரி கோஸ்ட் | .... | 50 |
| மேல் வோல்ட்டா | .... | 52 |
| டோகோலந்து | .... | 53 |
| தகோமி | .... | 54 |
| மாலி | .... | 56 |

# மேற்கு ஆப்பிரிக்கா

மேற்கு ஆப்பிரிக்கா என்பது ஒரு பொதுப் பெயர். இந்தப் பகுதியிலுள்ள பத்து நாடுகளைப் பற்றிய விவரங்களை இந் நூலில் தந்திருக்கிறோம். சுதந்திரம் பெற்ற பிறகு இவற்றில் சில நாடுகள் அண்டை நாடுகளுடன் சேர்ந்து சில மாதங்கள் மட்டும் ஒரே ஆட்சியில் இருந்தன. தனித்து வாழ்வதிலேயே ஆர்வம் இருந்து வருகிறது. அதுவே ஆப்பிரிக்கரின் இயல்பு.

# சிரா லியோன்

அமெரிக்கா செல்வம் கொழிக்கும் சீமை. அந்த நாட்டின் தலைநகர் கவினுறு வாஷிங்டன் நகரம். அங்கு வெள்ளை மாளிகையில் ஒரு விருந்து நடைபெறுகிறது.

பல நாட்டுத் தூதர்கள் விருந்தில் கலந்து கொள்ளுகிறார்கள். பெண்கள் இல்லாத விருந்தும் ஒரு விருந்தா?

தூதர்களின் மனைவியர், பெரிய இடத்துப் பெண்கள், அழகான மகளிர் ஆகியவர்களும் இந்த விருந்தில் கலந்துகொள்கிறார்கள். ஒரு ஆடவர் ஒரு பெண்டிர் இப்படி மாறி மாறி உட்காருகிறார்கள். அடுத்தடுத்து இருப்பவர்கள் ஒருவரையொருவர் ஏற்கெனவே தெரியாதவர்கள்.

தெரிந்தவர்களுக்குப் பக்கத்திலேயே இருப்பதென்றால் நேரம் வீணாகிவிடுகிறது. விருந்துக்குப் போவதன் பயனும் கிடைப்பதில்லை. எனக்குத் தெரியாதது எதுவுமே இல்லை என்ற மமதை கூடாது. புதிய நண்பர்களுடன் பழகவும் பிற நாடுகளைப்பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டும். இந்த மனப்பான்மை உள்ளவர்கள் தான் இந்த விருந்துகளில் பலராவர்.

செய்தித் தாள்களில் வெளியிடவும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் காண்பிக்கவும் பல்லாயிரம் ரூபாய் மதிப்புள்ள கெமராக்களைக்கொண்டு செய்தி

யாளர்கள் படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். செய்தித் திரைப்படக்காரர்களும் சரி, ஏனையோரும் சரி இள வயதினரான பெண்களைப் படம் பிடிக் கிறார்கள்.

அதோ ஒரு தூதரும் அடுத்து ஒரு நங்கையும் இருக்கிறார்கள்: விருந்து சுவையாகத்தான் இருக் கிறது. அவர்களுடைய உரையாடல் அதைவிடச் சுவையாக இருக்கிறது. அவர்கள் இருவர் முகங்களும் அன்றலர்ந்த செந்தாமரை மலர்போல் காட்சி தருகின்றன. அப்படி என்ன பேச்சு? சற்று ஒட்டுக் கேட்போமே.

''நீங்கள் எந்த நாட்டின் தூதராக வந்திருக் கிறீர்கள்'' என்று பெண்களுக்குரிய மெல்லிய குரலில் அந்த நங்கை கேட்கிறாள்.

தூதுவர் தம் நாட்டின் பெயரைச் சொல்லுகிறார். அவரும் மெல்லிய குரலில்தான் பேசுகிறார். ஒலி பெருக்கிக் கருவியின் முன்னால் பேசும்போதும் காட்டுக் கத்தாகக் கத்துவதும், தங்களோடு பேசிக்கொண்டிருப் பவர்கள் எல்லோரும் செவிடர்கள் என்று எண்ணு வதும் இந்தியருக்கே உரிய சிறப்பான பண்பு ஆகும்.

கேள்விப்படாத பெயராக இருக்கிறதே? என்று அந்த மங்கை சுருக்கமாக மற்றொரு கேள்வியைச் சேட்கிறாள். உலக நாடுகளின் பெயர்களெல்லாம் தனக்குத் தலைகீழ்ப் பாடம் என்பது அவள் எண்ணம். ஆப்பிரிக்காவில் மட்டும் ஐம்பது நாடுகள் இருப்பதை அவள் அறியாள்.

''கற்றது கை மண்ணளவு
கல்லாதது உலகளவு''

என்ற குறளையும் அவள் படித்ததில்லை. அழகான

பெண்களுக்கு துடிதுடிப்பு இருக்கிற அளவுக்கு அறிவு இருப்பதில்லை.

அவளுடைய கேள்விக்குத் தூதர் மறுமொழி சொல்வதற்குள் அவள் கேட்கிறுள்:

அது சரி, உங்கள் நாட்டில் அப்படி என்ன சிறப்பாகக் கிடைக்கிறது?

"உங்களைப்போல அழகும் கவர்ச்சியும் உடைய மங்கையருக்கு மேலும் எழிலும் ஏற்றமும் ஊட்டும் விலையுயர்ந்த வைரங்களையும் கண்ணைப் பறிக்கும் ரத்தினங்களையும் தருவது எங்கள் நாடு."

தூதர் இவ்வாறு சொன்னதும், அழகு நங்கை வாயடங்கிப் போனுள்.

அந்தத் தூதரின் நாடு சிராலியோான்.

* * *

சிராலியோனில் வைரச் சுரங்கமுள்ள பரப்பு 480 சதுர மைல். கன்னியாகுமரி மாவட்டத்தின் பரப்பு 645 சதுர மைல் என்பதிலிருந்து இந்தச் சுரங்கங்களின் அளவை உணரலாம்.

* * *

சிராலியோனின் பெரிய ஏற்றுமதி வைரக் கற்கள். அமெரிக்காவுக்கும் பிற நாடுகளுக்கும் வைரக் கற்கள் ஏற்றுமதியாகின்றன.

1945-ல் கிடைத்த ஒரு வைரக் கல்லின் எடை 770 காரட் இருந்ததாம். பெரும்பாலான கற்கள் இரண்டு அல்லது மூன்று காரட் எடையுள்ளன.

200 முதல் 500 காரட் எடையுள்ள கற்களும் இடையிடையே கிடைக்கின்றன. வைரக் கற்களின்

விற்பனையில் கிடைக்கும் லாபத்தில் 45% வருமானவரி விதிக்கப்படுகிறது. இதனுல் அரசினருக்கு ஆண்டு தோறும் ஒருகோடி ரூபாய் கிடைக்கிறது.

உலகில் கிடைக்கும் ரத்தினங்களில் கால் பங்கு இந்த நாட்டில் கிடைக்கிறது.

ஆண்டுதோறும் சிலகோடி ரூபாய் பெறுமான வைரக் கற்களும் நவரத்தினங்களும் இந்த நாட்டி லிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றன. இந்தக் கள்ளக் கடத்தலைக் கண்டுபிடிக்க ஈராயிரம் காவலரும் கடற் படையின் ஒரு பிரிவினரும் வானெலி நிலையத்தாரும் ஈடுபட்டுள்ளனர்.

கடல் வழியாக மட்டும் இக்கள்ளக் கடத்தல் நடைபெறவில்லை. மலைகள், காடுகள் வழியாகவும் நடைபெறுகிறது. கோடீசுவரர்களின் உதவி பெற்ற ஏழைகள் ஆகாய விமானங்கள் வழியாக சிரியா, இஸ் ரேல் போன்ற நாடுகளுக்கு வைரத்தை அனுப்பு கிருர்கள்.

தொழில் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் பயன் படக்கூடிய சிலவகை வைரக் கற்களைத் தேர்ந்தெடுத்து ரஷ்யாவுக்கு அனுப்புவதில் அந்த நாட்டு ஒற்றர்கள் கண்ணுங் கருத்துமாக உள்ளனர். கள்ளக் கடத்தலைத் தடுக்கும் சுங்க ஊழியருக்கு ஒரு வாரத்திற்குக் கிடைக்கும் சம்பளம் வைரக் கற்களின் ஒரு செண்டு (ஒரு காரட்டில் நூறில் ஒரு பகுதி) விலைக்கும் குறைவு. எனவே அவர்கள் எப்படித்தான் பிடிக்கப் போகிருர்கள் அல்லது தடுக்கப் போகிருர்கள்? தங்க ளுக்கு வேலை போய்விடாதபடி கள்ளக்கடத்தல்காரர் களுடன் உடன்பாடு செய்துகொண்டு, ஆடிக்கு ஒரு தடவையும் அமாவாசைக்கு ஒரு முறையும் கடத்தல்

குழுக்களைப் பிடிப்பார்கள். பிடித்த செய்தியை நாளிதழில் கொட்டை எழுத்துக்களில் போடவும் ஏற்பாடு செய்வார்கள்.

கள்ளக் கடத்தலில் பழமும் தின்று கொட்டையும் போட்ட பெருச்சாளிகள் உலகெங்கும் இருக்கிறார்கள். கடத்தல் பிடிபட்ட செய்தி அல்லது வைரக் கற்கள் பறிமுதலான நிகழ்ச்சி அவர்களுக்கு அதிர்ச்சி கொடுப்பதில்லை.

வாழ்க்கையில் உறுதி கொண்டிருப்பவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. அவர்களில் ஒரு கூட்டத்தார்க்கு மானமும் இல்லை; வெட்கமும் இல்லை. மானத்தையும் வெட்கத்தையும் பெரியதாக மதிப்பவருடைய வாழ்வில் அவை இரண்டும்தான் எஞ்சியிருக்கும் என்பது வாழ்க்கையில் வெற்றிபெற்ற பலரது கருத்து.

**முத்துக்கள்**

**'கொட்டிவைத்த முத்தே !**
**குவித்தநவ ரத்தினமே !**
**கட்டிப் பசும்பொன்னே !**
**கண்மணியே ! கண்வளராய் !**

என்று தொட்டிலை ஆட்டிக்கொண்டு தாய் தன் குழந்தையைத் தாலாட்டுகிறாள்.

குழந்தைகளுக்கு முத்து, மாணிக்கம், முத்து மாணிக்கம், ராஜமாணிக்கம், ரத்தினம், நாகரத்தினம், சிவப்பு, மரகதம் போன்ற பெயர்களை இடுவதும் வழக்கமாய் இருக்கிறது. கோயில்களிலும் பலவகையான முத்துக்கள் கலைத்திறனுடன் பயன்படுத்தப் படுகின்றன.

லாட்டரிச் சீட்டு வாங்க இது ஏற்ற காலமா என்று சோதிடம் பார்ப்பவரிடம் கேட்டால் இன்ன இன்ன கோள்களுடைய அருளைப் பெற இன்ன இன்ன நவமணிகளைப் பதித்த மோதிரங்களை அணிய வேண்டு மென்று சொல்லுகிறார்கள்.

இவ்வாறு தொன்றுதொட்டு உலகம் போற்றி மதித்து வரும் நவமணிகள்:

1. வைரம்
2. முத்து
3. மரகதம்
4. மாணிக்கம்
5. நீலம்
6. புட்பராகம்
7. வைடூரியம்
8. கோமேதகம்
9. பவளம்

என்பன.

பாண்டிய நாடு முத்துடைத்து என்பது அதன் பெருமைகளுள் ஒன்று. இலங்கையில் ரத்தினக் கற்கள் கிடைக்கும் ரத்தினபுரா என்ற பகுதி இருக்கிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் அனந்தப்பூர் வட்டத்தில் வஜ்ரகரூர்ப் பகுதியில் வைரப் படிவப் பாறைகள் உள்ளன.

வட இந்தியாவில் பன்னு என்னுமிடத்தில் பலவகையான முத்துக்களும் ரத்தினங்களும் கிடைக்கின்றன. ஆண்டுதோறும் 31 கோடி ரூபாய் மதிப்புள்ள வைரக் கற்களும் பிற நவமணிகளும் இங்கிருந்து அகழ்ந்து எடுக்கப்படுகின்றன.

முத்துக்கள் ஆற்றங்கரைகளிலேயே கிடைக்கின்றன. வளைகுடாக்களிலும் ஆறுகளின் கழிமுகப் பகுதிகளிலும் அவை ஆற்று நீரால் கழுவப்பட்டு தேங்கிக் கிடக்கின்றன. சிராலியோனில் சேவா ஆற்றின் கரையில் இவ்வாறு முத்துக்கள் கிடைக்கின்றன. தமிழ் நாட்டில் தூத்துக்குடிக் கடலில் இடையிடையே முத்துக்குளிக்கப் படுவதை வாசகர் அறிவர்.

சிராலியோனில் கிடைக்கும் நவமணிகளில் புட்பராகம் குறிப்பிடத்தக்கது.

புட்பராகக் கல்லை மோதிரமாக அணிந்துகொண்டிருப்பவர் இல்லத்தில் நாள்தோறும் செல்வம் வளரும் என்பது மக்களுடைய நம்பிக்கையாக இருந்து வருகிறது. "அவர்களுக்குத் தீய கனவுகள் ஏற்படா. இதை அணிந்திருப்பவர்களுக்கு நோய் ஏற்படுமுன் புட்பராகத்தின் நிறம் மாறும். இதை முன் அறிவிப்பாகக் கொண்டு, நோய் வருமுன்னே தடுத்துக் கொள்ளலாம்."

சிராலியோனில் சிறு அளவில், அட்லாண்டிக் கடற்கரையில் பவளம் கிடைக்கிறது; கடலில் பலவிதமான சங்குகளும் சோழிகளும் முத்தும் பவளமும் அகப்படுகின்றன. இராமேசுவரம், கன்னியாகுமரி போன்ற இடங்களில் கடலில் கிடைக்கும் பொருள்களைக்கொண்டு விலை மதிப்பில்லாத சின்னஞ்சிறு சாமான்களைச் செய்கிறார்கள். வேறு சில கடற்கரைகளில் பவளம் கிடைக்கின்றது. உலகெங்கும் கிடைக்கின்ற பவளத்தை வாங்குவதிலும் விற்பதிலும் தமிழ் வணிகர் ஈடுபட்டிருந்ததற்குச் சான்றாகச் சென்னையில் பவளக்காரத் தெருவும் தமிழ்நாட்டு நாடோடி இலக்கியத்தில் பவளக்கொடி மாலையும் உள்ளன.

அறிவியல் முன்னேற்றத்தாலும் அமெரிக்கரின் விடாமுயற்சியாலும் எல்லாப் பொருள்களுக்கும் மாற்றுப் பொருள்கள் ஏற்பட்டுவிட்டன. ஒரு நாட்டிலிருந்து இயற்கை ரப்பரை வாங்க விரும்பாவிட்டால் அமெரிக்கா செயற்கை ரப்பரைச் செய்து விடுகிறது. இவ்வாறு நூற்றுக்கணக்கான பொருள்களுக்கு அமெரிக்கா செயற்கைப் பொருள்களைக் கண்டுபிடித்து விட்டது. வைரம், மரகதம் சிவப்பு, ரத்தினக் கற்கள் எல்லாவற்றையும் அமெரிக்கர் செயற்கை முறையிலேயே செய்கிறார்கள்.

ஆகையால் அறிவு வளர்ச்சி யின்றி, இயற்கைச் செல்வங்களை மட்டும் வைத்துக்கொண்டு எந்த நாடும் முன்னேற்றமடைய இயலாது. அவ்வாறு இயலும் என எண்ணுவது படிப்பின்றி முன்னோர் தேடி வைத்த செல்வத்தைப் பேணி வைத்துக் கொள்ள முயலுவதை ஒக்கும்.

எடை மிகுந்த பெரிய வைரக்கற்கள் கிடைத்தால் தான் பெருமை. தென் ஆப்பிரிக்காவில் எடுக்கப் பட்ட கல்லினன் என்ற வைரக்கல் 3,106 காரட் எடையிருந்ததாம்.

இவ்வாறு சிறந்த கற்கள் கிடைத்தாலும்கூட அவற்றை வாங்கவும் பயன்படுத்தவும் பாதுகாக்கவும் பட்டை தீட்டவும் செல்வம் நிறைந்த நாடுகளால் தான் இயலும்.

மனிதருள் ஒவ்வொருவரும் பிறந்த மாதத்திற்கும் நிறத்திற்கும் ஏற்ப இன்ன இன்ன வகையான நவமணிகளை அணிந்து கொள்ளலாமென்று கீழைநாடுகளிலுள்ள சோதிடர்களும் மேலை நாடுகளிலுள்ள அறிஞர்களும் எண்ணியல் சோதிடர்களும் கூறு

கின்றனர். அமெரிக்கா அறிவியல் துறையில் பல வகையாகப் பயன்படுத்துவதற்கே வைரங்களை வாங்கி வருகிறது.

வைரம், நவமணிகளுக்கு அடுத்தபடி இந்த நாட்டின் பெருஞ் செல்வமாய் இருப்பவை: பனை ஈச்சை, கொக்கோ தோட்டங்கள்.

**பனை ஈச்ச எண்ணெய்**

இந்த நாட்டு மண்ணுக்கும் மழை வளத்துக்கும் ஏற்ற ஒரு மரவகை செந்நிறமான பனைஈச்சை ஆகும்.

இதிலிருந்து நிறைய எண்ணெய் எடுக்க இயலும். இந்த எண்ணெய் தேங்காய் எண்ணெய் போன்று பல வகையாகப் பயன்படுகிறது. விலை டன்னுக்கு ரூ. 3,500.

"இந்த மரம் பயிரிட்ட நான்காம் ஆண்டு முதல், முப்பது ஆண்டுகளுக்குப் பலன் தருகிறது. பயிரிடும் செலவு ஓர் ஏக்கருக்கு ரூ. 4,000 ஆகும். ஆண்டு தோறும் ஏற்படும் பாதுகாப்புச் செலவு ஏக்கருக்கு ரூ. 1,000 வரை ஆகலாம்.

இந்தியாவில் 60 அங்குலம் மழை பெய்து, ஆண்டில் மூன்று மாதங்களாவதுகோடைகாலம் உள்ள பகுதிகளில் பனைஈச்ச மரங்களை, 2,000 ஏக்கர் பரப்புள்ள இடங்களில் தொழில்முறையில் பயிரிட ஏற்பாடு நடைபெறுகிறது. கேரளத்தில் அரசினர் தங்களுடைய காடுகளில் இதைப் பயிரிட முன்வந்திருக்கின்றனர்.

மைசூர் மாநிலத்து மங்களூர் வட்டத்தில் சுல்லியா மலைப்பகுதியிலும், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்துப் பேச்சிப்பாறைப் பகுதியிலும், திருநெல்வேலி மாவட்டத்து ஆரியங்காவு மலைப் பகுதியிலும் ரப்பர்த் தோட்டம், தேயிலைத் தோட்டம் போன்று

பெரியதொரு தோட்டத் தொழிலாக, செந்நிறப் பனையீச்சை மரங்களைப் பயிரிட வாய்ப்பு இருக்கிறது.

இந்தப் பயிருடன் ஊடு பயிராகக் கொக்கோ வையும் பயிரிடலாம். காங்கோவில் யூனிலீவர்க் கம்பெனியார் இவ்வாறு பயிரிட்டிருக்கின்றனர். இந்த மரம் மிக உயரமாக வளர்கிறது. மரத்திலிருந்து ஒரு வகை எண்ணெய்யையும் காயிலிருந்து மற்றொரு வகை எண்ணெய்யையும் எடுக்கின்றனர்.

ஆப்பிரிக்க நகரங்களில் அவ்வப்போது காய்ச்சிய எண்ணெய்யைக் கடையில் வாங்கலாம். இந்த எண் ணெய்யில் சமைத்த பொருள்கள் சத்துள்ள உணவாக அமைகின்றன.

எண்ணெய் பிழிந்த பிறகு எஞ்சும் சக்கை பன்றி களுக்கு உணவாகக் கொடுக்கப்படுகிறது. பன்றியை வளர்த்தும் விற்றும் பணம் ஈட்டியவர், சிராலியோ னில் பலர் உள்ளனர். தமிழ் நாட்டிலும் இந்தத் தொழிலால் செல்வரான பலரை யான் அறிவேன். தாங்களே நேரடியாக வளர்க்க வெட்கப்பட்டு, பணம் கொடுத்துத் தரகர் வாயிலாகப் பன்றி வளர்ப்பவர் களும் இருக்கிறார்கள்.

காய் தானே விழுந்தால், மரத்திலிருந்து விழுவ தால் அடிபட்ட அந்தக் காயிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் கெட்டுவிடுகிறது, எனவே, காய் விழுவ தற்குமுன் அதைப் பறித்துவிட வேண்டும்,

சிராலியோனில் மற்றும் ஒரு பிரச்சினை, காயினுள் உள்ள கொட்டை பெரிதாக இருப்பதாகும். கொட்டை பெரிதாக இருப்பதால், எண்ணெய் குறை வாக இருக்கிறது. கூடுதலான எண்ணெய் தரக்கூடிய

வகைகளைப் பயிரிட விதை ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

**கொக்கோ**

மக்களுடைய உணவு வகைகள் அடிக்கடி மாறி வருகின்றன. நம்முடைய பாட்டனும் பாட்டியும் சாப்பிட்டதைவிட நம்முடைய தாயும் தந்தையும் இனிப்பு வகைகளை அதிகமாகச் சாப்பிட்டுவருகிறார்கள். நாம் அவர்களைவிடக் கூடுதலாக இனிப்புப்பண்டங்களை உண்ணுகிறோம். இக்காலத்துச் சிறுவர் சிறுமியர் உட்கொள்ளும் இனிப்புப் பொருள்களின் அளவு இன்னும் கூடுதலாக இருந்து வருகிறது.

இனிப்பின் சுவையை, சிறு குழந்தைகளுக்கு ஊட்டுவது சாக்லெட், சாக்லெட்டில் சேரும் பொருள்கள் பால், சர்க்கரை, கொக்கோ.

உலகில் பெரிய அளவில் மேற்கு ஆப்பிரிக்காவில் தான் கொக்கோ பயிரிடப்படுகிறது. கானா, நைஜீரியா, சிரா லியோன், ஐவரிகோஸ்ட்டு, லைபீரியா, டோகோலந்து, கமரூன்ஸ் ஆகிய நாடுகளில் கொக்கோ பயிர் செழித்தும் கொழித்தும் வளர்கிறது,

கொக்கோ தோட்டம் காண்பதற்கு கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும், இந்தத் தோட்டங்களைப் பற்றி இந்நூல் வரிசையில் ஐந்தாவதான கானா என்னும் நூலில் விவரமாகக் கூறியிருக்கிறோம்.

சிராலியோனில் 1925ல்தான் கொக்கோ பயிரிடத் தொடங்கப்பெற்றது. 20,000 ஏக்கரில் கொக்கோ பயிரிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலான தோட்டங்களின் அளவு இரண்டு அல்லது மூன்று ஏக்கரே ஆகும்.

### அமைப்பு

சிராலியோன் மேற்கு ஆப்பிரிக்காவில் அட்லாண்டிக் கடலோரமாக உள்ள சிறு நாடு. வடக்கேயும் வடகிழக்கேயும் கினி, தென்கிழக்கே லைபீரியா, தென் மேற்கே அட்லாண்டிக் கடல் ஆகியவற்ருல் இது சூழப் பெற்றிருக்கிறது.

### லைபீரியா

லைபீரியா, சிராலியோனின் அண்டை நாடு. இரு நாடுகளிலுமே விடுதலை அடைந்த நீக்ரோ அடிமைகள் குடியேற்றப்பட்டனர்.

லைபீரியாவில் அவர்களைக் குடியேற்றியவர் அமெரிக்கர், சிராலியோனை இவ்வாறு நீக்ரோக் களுக்குப் புகலிடமாக அமைத்தவர்கள் ஆங்கிலேயர்.

### ஆங்கிலேயர் தொடர்பு

'கோபத்திலும் இரக்கம்'
'வறுமையிலும் செம்மை'
'பேராசையிலும் கருணை'

என்ற இலக்கணங்களுக்கு இலக்கியமாக விளக்குகிறது இச்சிறுநாடு. பதினெட்டாம் நூற்ருண்டில் அமெரிக்க விடுதலைப் போர் முடிவடைந்தவுடன் பிரிட்டிஷ் போர்ப் படையிலும் கடற் படையிலும் பணியாற்றிய வீரர்கள் வேலை இழந்தனர், இவர்கள் நீக்ரோ அடிமைகள். இவர்கள்மீது ஈவும் இரக்கமும் காட்டிய ஆங்கிலேயர் சிலர் மேற்கு ஆப்பிரிக்காவில் கடலோரத்தில் சின்னஞ்சிறு பகுதி ஒன்றில் இவர்களைக் குடி வைத்தனர்.

குடியேறியவர்களின் தொகை நாளடைவில் பெருகிற்று. சுற்றுவட்டப் பகுதிகளையும் கைப்பற்றிப்

பிரிட்டன் தன்னுடைய 'காலனி' ஆட்சிக்குட்பட்ட பகுதியை உண்டாக்கிக் கொண்டது.

இப்பகுதி, இன்று, சிராலியோன் என்ற பெயரில் தனி நாடாக விளங்குகிறது. இப்போதைக்கு இந்த நாடு பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இணைந்திருக்கிறது. இந்தியாவைப் போலவே இந்த நாடும் பிரிட்டனிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரக் குடியரசாக இருக்கிறது.

சிராலியோன் ஆங்கிலேயர்களால் உருவாக்கப் பெற்றுள்ள நாடு, இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு தீவு என்று கூட இதைச் சொல்லலாம்.

கோல்டு கோஸ்ட்டு (கானு), காம்பியா நாடுகளுடன் சேர்ந்து மூன்று மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கும் பிரிட்டிஷார் சிராலியோனில் ஒரு கவர்னரை நியமித்தனர். 1847-ல் கோல்டு கோஸ்ட்டு தனியே பிரிக்கப்பட்டது. 1888-ல் காம்பியாவின் ஆட்சி துண்டிக்கப்பட்டது. இவ்வாறே இந்திய நாட்டினின்றும் ஏடன், பர்மா ஆகிய பகுதிகள் பிரிட்டிஷ் ஆட்சியினரால் பிரிக்கப்பட்டது இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

இங்குள்ள நீக்ரோக்கள் ஆங்கிலேயர்களால் குடியேற்றப்பட்டவர்கள்- அந்தக் குடியிருப்புக்களுக்கு ஆங்கிலேய வீரர்களின் பெயர்கள் அல்லது ஆங்கிலேயர் வெற்றி பெற்ற போர்க்களங்களின் பெயர்கள் இடப் பெற்றன. நீதி மன்றமும் அரசியல் அமைப்பும் இங்கிலாந்தை முன்மாதிரியாகக் கொண்டு விளங்குகின்றன. கல்லூரிகள் இங்கிலாந்திலுள்ள பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றுள்ளன. இரயில் போக்குவரத்து ஆங்கிலேயரால் ஏற்பட்டது. ஆங்கில மொழியும் ஆங்கிலேயருடைய நாகரிகமும் பரவி வரு

கின்றன. இந்தியர் உட்பட ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த பல நாட்டவர் சிறுசிறு கூட்டங்களாக இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

பொருளாதார வளர்ச்சிக்கு இங்கிலாந்தின் உதவியை நம்பித் தான், சிராலியோன் அரசு தன் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

**ஆட்சிப் பிரிவுகள்**

சிராலியோன் வடமாநிலம், தென்கிழக்கு மாநிலம், தென்மேற்கு மாநிலம் என மூன்று மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது.

வடமாநிலம்: இடையர்களாக உள்ள நாடோடிக் கூட்டத்தினர் இம்மாநிலத்தில் பெருந் தொகையாக உள்ளனர். பெருக்குவடிவு உள்ள நிலப்பகுதிகளும் இரும்புத் தாதுச் சுரங்கங்களும் இந்த மாநிலத்தில் உள்ளன.

100 அங்குலம் மழை பெய்யும் பகுதிகளும் வட மாநிலத்தில் உண்டு.

குறிப்பிடத்தக்க விளைபொருள்களாக நெல்லும், மணிலாக்கடலையும், சோளமும் பருப்பு வகைகளும் பயிரிடப்படுகின்றன.

யானைகள், முதலைகள், பலவகைப் பறவைகள், பூச்சிகள் ஆகியவற்றுக்கும் இந்த மாநிலம் புகழ் பெற்றது. யானைத் தந்தம் இங்கிருந்து பெரிய அளவில் ஏற்றுமதியாகிறது.

காடுகளில் 'புஷ்—கௌ' என்ற பெயருள்ள பயங்கரமான பசு மாடுகள் உள்ளன. இவை எருமை போன்ற தோற்றமும், தந்திரமான குணங்களும், வேட்டையாடுபர்களுக்கு அஞ்சாத தன்மையும் உடையவை. குடி

நீரில் நஞ்சைக் கலந்து கொடுத்து, ஆப்பிரிக்கரும் ஐரோப்பியரும் இவற்றைக் கொல்லுகிறார்கள்.

சிங்கங்கள் இங்கு ஏராளமாக இருக்கின்றன. சிராலியோன் என்னும் பெயரே சிங்கமலை என்றுதான் பொருள்படும். கடல் அலைகளின் பேரொலி சிங்கத்தின் ஒலிக்கு ஒப்பாகும். அதனால் அவ்வாறு பெயர் ஏற்பட்டது என்பர்.

**தென்மேற்கு மாநிலம்:** இது இந்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்குகிறது. உப்பங்கழிகளும் மாந்தோப்புகளும் உள்ளன. இந்த மாநிலத்தில் ஐந்து பெரிய ஆறுகள் உள்ளன. இங்கு வளரும் ஒரு செடியிலிருந்து கிடைக்கும் நாரிலிருந்து துடைப்பம், தூரிகை, மட்டைகள், பலவகையான பிரஷ்களையும் செய்கிறார்கள்.

இந்த மாநிலத்தில் மிகப் பெரிய அளவில் இரும்புத் தாதுப் படிவங்கள் மாராப்பா என்னுமிடத்தில் உள்ளன.

**தென்கிழக்கு மாநிலம்:** இது உள்நாட்டுப் பகுதிகள் அடங்கியது. இரயில் போக்குவரத்து ஏற்பட்ட பிறகே இம்மாநிலம் சிறந்து விளங்குகிறது.

வைரச் சுரங்கங்கள் உள்ளன. சிராலியோனிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பல்வேறு பொருள்களில் மூன்றில் இரண்டு பகுதி இந்த மாநிலத்திலேயே கிடைக்கிறது. இரண்டாம் உலகப் போரால் மலேயா நாடு, ஜப்பானியர் வயப்பட்டபோது, ஆங்கிலேயர்க்குத் தேவையான ரப்பரை உற்பத்தி செய்ய இம்மாநிலத்தில் ரப்பர் பயிரிடும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன. இங்குள்ள ரப்பர் தோட்டங்கள் இவ்வாறு உண்டானவையே.

**கிரியோல்**

சிராலியோனில் வாழும் பல்வேறு மக்களில் செல்வாக்கு உள்ளவர்கள், அடிமைகளாக இருந்து அமெரிக்கருக்கு எதிராகப் பிரிட்டிஷ் படையில் சேர்க்கப்பட்டு பிறகு விடுதலை பெற்று, பிரிட்டிஷாரால் இங்கே குடியேற்றம் செய்யப் பட்ட நீக்ரோக்கள் ஆவர். இவர்களுக்குக் கிரியோல் என்றும் பெயர் உண்டு. ஜமைக்காத் தீவில் புரட்சி செய்த நீக்ரோக்களும் இங்கேயே குடி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கும் கிரியோல் என்றுதான் பெயர்.

கிரியோல் இனத்தவர் மேற்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் ஆட்சியிலுள்ள நாடுகளிலெல்லாம் உள்ளனர். சிராலியோனில், தலைநகரத்திலும் அதன் புறநகர்களிலும் இவர்கள் பெரிய அளவில் வாழ்கின்றனர்.

இவர்கள் ஆசிரியராயும் வழக்கறிஞராயும் கிறித்தவ தேவாலயங்களில் குருமாராகவும் அரசாங்க ஊழியராயும் இருக்கிறார்கள்.

இரயில்நிலையங்களிலும் படகுகளிலும் வியாபாரம் செய்வதிலும் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பிற நீக்ரோக்களைவிட, கிரியோல்கள் வாழ்க்கைத் தரத்திலும் கல்வியிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இதற்கு ஒரு காரணம் இவர்களைக் குடியேற்றியபோது இவர்களுக்குத் துணையாக 60 ஆங்கிலேயப் பெண்களும் குடியேற்றப்பட்டதாகும். ஆப்பிரிக்கர் ஐரோப்பியர் ஆகியோரின் கலப்பினமாக இவர்கள் தோன்றியுள்ளனர்.

கிறித்தவ சமயத்தில் சேர்ந்திருந்தாலும் இவர்கள் முஸ்லிம்களின் விழாக்களையும் கொண்டாடுகிறார்கள்.

முன்னோர் வழிபாட்டிலும் நம்பிக்கை வைத்திருக் கிறார்கள்.

கிரியோல்களின் திருமணச் சடங்கு, வீட்டில் குழந் தைகளை வளர்க்கும் முறைகள் முதலியன ஆப்பிரிக் கரைப் பின்பற்றியவையே. இவர்களுடைய சில இயல்பு கள் முன்னைப் பழமைக்கும் பழமையாகவும் வேறுசில நடைமுறைகள் பின்னைப் புதுமைக்கும் புதுமையாக வும் உள்ளன.

கிரியோல்களுடைய வீடுகள்முதல் தளம் செங்கல்லா லும் மேல்மாடி பலகைகளாலும் கட்டப்பட்டிருக்கும்.

மரமும் தகரமும் பயன்படுத்திக் கட்டிய வீடுகளையே நகர்ப் புறங்களில் சிராலியோன் எங்கும் காணலாம்.

இந்த இனத்தாரிடையே ஒரு வழக்கமுண்டு ஒரு பையன் அல்லது ஒரு பெண்ணுக்கு வயது வந்ததும் ஒரு சடங்கு நடத்துவார்கள். அச்சடங்கில் அந்தப் பையனுக்கு அல்லது பெண்ணுக்கு சில விடுகதைகளைப் போட்டு விடை கூறப் பழக்குவார்கள். விடுகதைக்குச் சரியான விடை கூறத் தெரிந்துவிட்டால் வாழ்க்கையில் அவர்கள் சமாளித்துக்கொள்வார்கள் என்று நம்பு கிறார்கள்.

அங்கே இன்னொரு வகைப் பழங்குடி மக்கள் இருக் கிறார்கள். அவர்கள் வழக்குகளில் தீர்ப்புக் கூற, விடு கதையை பயன்படுத்திக் கொள்கின்றனர். ஒருவன் குற்றவாளியா, இல்லையா என்பதைக் கண்டறிய அவ னுக்குச் சில விடுகதைகளைப் போடுவார்கள். அவன் சரியாக விடை கூறிவிட்டால் ''நிரபராதி'' என்று கூறி அவனுக்கு விடுதலை அளித்து விடுவார்கள். தெரியாமல் விழித்தால் தண்டனை நிச்சயம் உண்டு.

மேற்கு ஆப்பிரிக்காவில் வாழும் இந்த நீக்ரோக்கள் தாங்கள் தான் உண்மையான நீக்ரோக்கள் என்று சொல்லுகிருர்கள். இவர்கள் பொதுவாக 5 அடி 8 அங்குலம் உயரமும் கறுப்பும் பழுப்பும் கலந்த நிறம் முதல் ஊதாவும் கறுப்பும் கலந்த நிறம் வரையும் உள்ளனர், இவர்களுடைய உடம்பில் உரோமம் இருப்பதில்லை' கறுப்பான தலைமயிர், அகன்ற மூக்கு, வெளியே துருத்திக் கொண்டிருக்கும் தடித்த உதடு ஆகியவை இவர்களுடைய உடற் கூறுகள்.

இவர்கள் ஏற்கெனவே வேறுபட்ட பல மொழிகளைப் பேசியவர்கள்: இவர்களை ஆங்கில மொழியினராக்க முயன்றும் இவர்கள் ஆங்கிலத்தைப் படித்தும்கூட இவர்களால் அம்மொழியைத் தாய்மொழியாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. பெரும்பான்மையான ஆங்கிலச் சொற்களுடன் ஒரு சில ஸ்பானிஷ், போர்த்துக்கீசியச் சொற்களும், ஆப்பிரிக்கக் கொச்சை வழக்கு சொற்ருெடர்களும் கலந்த பட்லர் இங்கிலீஷை இவர்கள் பேசுகின்றனர். இப்பேச்சு ‘கிரியோல் மொழி’ என்று குறிப்பிடப்படுகிறது. இம்மொழிக்குரிய இலக்கியம் ஏட்டில் எழுதா இலக்கியமாகிய நாட்டுப் பாடல்களும் பழமொழிகளும் விடுகதைகளுமே.

விடுகதை விளையாட்டு என்று ஒரு விளையாட்டு உண்டு. அந்த விளையாட்டில் சிறுவர்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து கொள்ளுவார்கள். ஒரு கட்சிக்கு ஐந்தாறுபேர் இருப்பர். ஒரு கட்சியில் இருந்த ஒருவன் ஒரு விடுகதை போடுவான். எதிர்க் கட்சிக்காரர்கள் அதை விடுவிக்க வேண்டும். அல்லது பதில் விடுகதை போடவேண்டும். இப்படியே மணிக்கணக்கில் இந்த விளையாட்டை அவர்கள் நடத்துவார்கள்;

**ஆப்பிரிக்கப் பழங்குடிகள்**

சிராலியோனில் பதின்மூன்று வகையான ஆப்பிரிக்கத் தொல் மரபினத்தார் வாழ்கிறார்கள். காடுகளிலும் உள்நாட்டுப் பகுதிகளிலுமே இவர்கள் வாழுகின்றனர். இவர்களுக்குள் சமூகத் தலைவர்கள் உள்ளனர், இந்தத் தலைவர்கள் அரசினரிடம் செல்வாக்குப் பெற்றவர்களாயும் பெரிய செல்வர்களாகவும் விளங்குகின்றனர். ஒரு தலைவன் பட்டத்துக்கு வரும்போது அவனுக்கு முடி சூட்டுவிழா நிகழும். அப்போது அவ்வினத்தார் அனைவரும் அன்பளிப்பும் காணிக்கையும் கொடுத்து மரியாதை செலுத்தவேண்டும். அவரவர் இனத்துக்குள் அந்தத் தலைவன் வைத்ததுதான் சட்டம்.

15ஆம் நூற்றாண்டுக்குப்பின் பலர் முஸ்லிம்களாக மாறியுள்ளனர். ஏனையோருக்குக் குறிப்பிட்ட சமய நம்பிக்கை எதுவும் இல்லை. பேயும் பிசாசும்தான் இவர்கள் வணங்கும் தெய்வங்கள். திருவிழாக்களுக்கு மட்டும் குறைவில்லை. திருவிழாவை யொட்டி நடைபெறும் நடனங்களில் ஊரார் அனைவரும் நடனம் ஆடுவர்.

இவர்கள் வாழும் சிற்றூர்களில் பெரும்பாலும் ஒரே ஒரு தெருத்தான் இருக்கும். கிராமங்களிலிருந்து நகரப் பகுதிகளில் குடியேறும் பழக்கம் பெருகிவருகிறது. அதன் பயனாய்ச் சிலர் கிறித்தவ மதத்திலும் சிலர் இஸ்லாமிய மதத்திலும் சேர்ந்து வருகிறார்கள்.

இவர்களுடைய முக்கியமான தொழில் வேளாண்மை. வேளாண்மைத் தொழிலின் பலவகைக் கட்டங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு பெயரை வைத்திருக்கிறார்கள். காதலித்துத் திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் இவர்களிடம்

உண்டு. வயலில் வேலை செய்ய ஆள் வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஆடவர்கள் பல மனைவியரையும் மணந்து கொள்கிறார்கள். கள்ளக் காதல் பிடிபட்டால், பிடித்தவனின் நிலத்தில் சில மாதங்கள் வேலை பார்க்க வேண்டுமென்ற தண்டனையைக் காதலித்தவனுக்கு வழங்குவார்கள்.

இறந்தவர்களுடைய கல்லறையருகே உறவினர்கள் நின்று, அவருக்குத் தாங்கள் இழைத்த கொடுமைகளைச் சொல்லி மன்னிப்புக் கேட்கும் வழக்கம் இவர்களிடையே நிலவி வருகிறது.

காலப் போக்குக்கு ஏற்ப இவர்களும் சிறிது சிறிதாக மாறி வருகிறார்கள். பயிரிடுவதையும் கோழி வளர்ப்பதையும் மீன் பிடிப்பதையும் கூட்டுறவு முறையில் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். வயல் வேலைகளை விடுத்து கொக்கோ, ரப்பர் முதலிய தோட்டங்களில் வேலை பார்க்க ஆரம்பித்து விட்டனர். வாரந்தோறும் சம்பளம் வாங்குவதால் பெண்கள் யாருக்கும் கட்டுப்படாமல் தங்கள் விருப்பப்படியே நடக்கின்ற மன நிலையில் வளர்ந்து வருகிறார்கள். ஆடவர்கள் அறட்டை அடிக்க ஊர்தோறும் ஒரு கச்சேரிக்கூடம் இருக்கிறது.

சில இனங்களின் பெயர்களாவன: டாம்னி, மண்டே, புல்லா, மாண்டிங்கோ, மெண்டிஸ், சுசுஸ், டெம்னிஸ், சிஸ்ஸிஸ் முதலிய பல. இந்த இனங்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளைப்பற்றி எழுதுவதாயின் இந்த நூலின் அளவு அதற்குப் போதியதாகாது. மனிதனின் தலையிலுள்ள மயிர்களை எண்ணினாலும் இவ்வினத்தவர் பேசும் மொழிகளை எண்ண இயலாது.

ஓர் இனத்தவருக்கும் மற்ருேர் இனத்தவருக்கும் சச்சரவு ஏற்பட்டால் சொற்போர் மற்போராகிவிடும். தோற்றுப்போன இனத்தவர் வெற்றிபெற்ற இனத் தவர்க்குத் தொண்டும் ஊழியமும் செய்துவர வேண் டும். அல்லது ஆண்டுக்கு இவ்வளவு (ஆடு, மாடு, யானைத் தந்தம்) என்று கப்பம் கட்ட வேண்டும்

மாண்டிங்கோ இனத்தவர், ஹவாஞ என்ற தென் அமெரிக்க நாட்டில் வீட்டு வேலை செய்யும் தொழிலில் பல்லாயிரம் பேர் உள்ளனர். பெனி என்ற இனத்தவர் லைபீரியா நாட்டுக்குக் குடியேறிவிடடனர்.

இவர்களுடைய குழந்தைகளில் எட்டுப்பேரில் ஒருவர்தான் பள்ளிக்கூடங்களுக்குப் போவதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். நோய் வந்தால் மந்திரவாதி யிடம் காணிக்கை செலுத்தும் பழக்கம் ஒழிந்து மருத் துவரிடம் காட்டி ஊசி போட்டுக்கொள்ளும் அளவுக்கு இவர்கள் முன்னேறி விட்டார்கள்.

**லெபனன் நாட்டினர்**

வாணிகத்திற்காக லெபனன் நாட்டிலிருந்து சில ஆயிரம் பேர் சிராலியோனில் குடியேறியுள்ளனர். இவர்களில் சிலர் தொழில் முறையில் பன்றிகளை வளர்க்கிருர்கள். சிராலியோனில் லாரிப் போக்குவரத் தும் இவர்களுடைய ஆதிக்கத்திலேயே இருக்கிறது. சின்னஞ்சிறு கடைகள் அனைத்தையும் இவர்களே நடத்துகிருர்கள். சிறு சுரங்கங்களின் உரிமைகளையும் இவர்கள் குத்தகைக்கு எடுத்து வருகிருர்கள்.

இவர்கள் இஸ்லாமிய மதத்தினர். சிரியா நாட்டு முஸ்லிம்கள் என்றும் இவர்களைக் குறிப்பிடுவது உண்டு.

இரயில் போக்குவரத்து ஏற்பட்ட பிறகே, சிரியா முஸ்லிம்கள் சிராலியோனுக்கு வருவாராயினர். இவர்

கள் பெருஞ் செல்வராகவும் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் அச்சாணியாகவும் ஆகிவிட்டனர்.

**மக்களின் பழக்க வழக்கங்கள்**

உடல் நலமின்றியிருந்தால் இறந்தவர்களுக்குப் பலி கொடுப்பதும் மந்திரவாதிக்குக் காணிக்கை கொடுப்பதும் சிராலியோனில் மரபு.

வயல்களில் நொமொலி என்று சொல்லப்படும் கற்கள் உள்ளன. இவற்றில் மனிதன் அல்லது உயிரினங்களின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். இவை ஏற்பட்ட காலம் இன்னதென்று தெரியவில்லை. விதை விதைக்கும்போது இந்தக் கற்களை அடிப்பது வழக்கம்; அடித்ததும் அவை இறை வடிவமாகிச் சுறுசுறுப்பாக வேலை செய்வதாகவும் அதனாலேயே அமோக விளைவு உண்டாவதாகவும் சிரா லியோனின் பழங்குடி மக்கள் தொன்றுதொட்டு எண்ணி வருகின்றனர்.

உப்பங்கழிகளிலும் நெல் விளையும் நாடு சிரா லியோன். இங்குள்ள மக்கள் மூன்று வேளையும் அரிசிச் சோறுதான் சாப்பிடுகிறார்கள். நமக்கும் அவர்களுக்குமுள்ள வேறுபாடு அவர்கள் அரிசிச் சோற்றுடன் நறுமணப் பொருள்கள் பலவற்றையும் கலந்து சாப்பிடுவதாகும்.

வேர்க்கடலை மிகுதியாக விளைகிறது. வறுத்தோ பொறித்தோ சாப்பிடுவதைவிட வேர்க்கடலையைச் சூப்பாகச் செய்து வயிறு நிறையக் குடிப்பதைத்தான் சிராலியோன் மக்கள் விரும்புகிறார்கள். இட்டலி சாப்பிடும்போது, சாம்பாரை, சீக்கியர் கோப்பை கோப்பையாகக் குடிப்பது இங்கே நினைவுக்கு வருகிறது.

பழ வகைகளில் அன்னுசிப் பழத்தை மிகுதியாக உண்ணுகிருர்கள்,

செல்வாக்குள்ள தலைவர்கள் சிறப்பான நாட்களில் கழுத்திலிருந்து கணுக்கால் வரை ஓர் ஆடை உடுத்திக் கொள்வர். கஞ்சுகம் என்று இதைச் சொல்லலாம். இத்தகைய ஓர் ஆடையை மிதிலைக் காட்சிப்படலத்தில் கம்பர் விவரிக்கிருர்,

உள்நாட்டுப் பகுதிகளிலுள்ள பாமர மக்களைத் தவிர ஏனையோர் அனைவரும் மேலை நாட்டு உடைதான் உடுத்துகின்றனர். தொப்பியும் கால் சட்டையும் பூட்சும் ஆங்கில நாகரிகத்தின் சின்னங்களாக விளங்கு கின்ற போதிலும் அவை அவர்களுடைய உடம்பைத் தான் தொட்டிருக்கின்றனவேயொழிய உள்ளத்தைத் தொடவில்லை.

**தலைநகர்**

சிரா லியோனின் தலைநகர் பிரீடவுன். பிரீடவுன் என்ற சொற்றொடருக்கு, சுதந்திர நகரம் என்று பொருள்படும். இந்த நகரம் அடிமைகளாய் இருந்து சுதந்திரம் பெற்றவர்களின் குடியிருப்புக்களைக் கொண்டு அமைந்ததால் இப்பெயர் பெற்றது. இந் நகரில் உள்ள துறைமுகம் இயற்கையாக அமைந்த ஆழ் கடல் துறைமுகம். அதன் பரப்பு ஏழு சதுர மைல். மேற்கு ஆப்பிரிக்கத் துறைமுகங்களில் இது அழகாக வும் புதிய இயந்திரங்களும் வசதிகளும் கொண்டதாக வும் இருக்கிறது. சுரங்கப் பகுதிகளுள்ள பல்வேறு திக்குகளுக்கு இங்கிருந்து இரயில் பாதைகள் செல்லு கின்றன. பல சிறிய துறைமுகங்களும் இந்த நாட்டி லுள்ளன.

இத்துறைமுகம் உலகிலேயே மூன்ருவது பெரிய துறைமுகம். உலகிலேயே பெரிய துறைமுகம் ரியோடி ஜெனிரோ. அதற்கடுத்த பெரிய துறைமுகம் சிட்னி. பிரீடவுன் துறைமுகத்தில் 200 கப்பல்கள் தங்கலாம். இது அளவில் பெரியதாகவும் ஆப்பிரிக்காவிலேயே தலைசிறந்த துறைமுகமாக வும் விளக்குகிறது. மேற்கு ஆப்பிரிக்காவிலும் அதற்குக் கிழக்கேயும் உள்ள பல நாடுகள் இந்தத் துறை முகத்தைப் பயன்படுத்து கின்றன,

சிராலியோன் ஆறு என்றும் ரோக்கெல் ஆறு என்றும் குறிக்கப்படும் ஆற்றின் கரையில் இருப்பதும் அமெரிக்காவிலுள்ள துறைமுகங்களுடன் வணிக உறவு பெற்றிருப்பதும் பிரீடவுனின் பெருமைகளாக உள்ளன.

போ : பிரீடவுனுக்கு அடுத்த பெரிய நகரம் இது. போடி, வாடி என்ற ஊர்கள் இந்தியாவில் உள்ளன. இந்த நகரின் பெயர் "டி" என்னும் உரிமைச்சொல் நீங்கி, சற்று மரியாதையாக அமைந்திருக்கிறது. இது உள்நாட்டில் ஒரு பகுதியின் தலைநகரம். போ என்ற சொல்லுக்கு 'குலாலரின் களிமண்' என்று பொருள். இவ்வூரில் மின்சார விளக்கு, தார்ச்சாலை, பள்ளிக்கூடம், இரயில் வசதி ஏற்பட்டதும் மேற்கு ஆப்பிரிக்கர் இவ்வூரைத் தங்களுடைய "லண்டன்" என்று கருதினர்.

**பல்சுவை**

**சிராலியோனின் பரப்பளவு:** 37,925 சதுரமைல். இது தமிழ்நாட்டின் பரப்பில் பாதி அளவாகும்.

**மக்கள் தொகை:** 30 லட்சம்.

**மழை:** சில இடங்களில் 177 அங்குலம் வரை பெய்கிறது. சராசரி மழை 100 அங்குலம் (தமிழ் நாட்டில் 35 அங்குலம்).

மழைக்காலம் ஜூன்முதல் அக்டோபர்வரை.

நவம்பர் முதல் ஏப்ரல் வரை வேனிற்காலம். எப்போதாவது சில ஆண்டுகளில் வேனிற் காலத்தில் நஞ்சு கலந்த காற்று அடிப்பது உண்டு. ஒரு நூற்றாண்டுக்குமுன் இதனால் சில நோய்கள் பரவிப் பலர் இறந்தனர். நஞ்சைப் போக்கும் மருந்துகள் பயன்படுத்தப் பட்டு, காற்றுச் சுத்தமாக்கப்படுகிறது.

**விளைபொருள்கள்:** நெல், வாழை, மிளகு, தென்னை, மணிலாக்கடலை, புகையிலை, ரப்பர்.

**பெரிய தொழிற்சாலைகள்:** எண்ணெய்த் தூய்மி; மாவு ஆலைகள்; பிளாஸ்டிக்ஸ், உயர்ந்த மதுவகை, பெயிண்டு சிகரெட் செய்யும் தொழிற்சாலைகள்.

**ஏற்றுமதி:** வயிரம், தங்கம், பனைஈச்ச எண்ணெய். காப்பி, கொக்கோ, இஞ்சி, குரோமியம், கோலா நட்டு, கப்பல் கட்ட உதவும் மரப் பலகை, மாட்டுத்தோல், ஆமையின் ஓடு, ஜப்பானுக்கு இரும்புத்தாது உருண்டைகள்.

கோலாநட் என்னும் ஒருவகைக் கொட்டையை தொழிலாளரும் கலைஞரும் அறிஞரும், புத்துணர்ச்சி பெற உண்ணுகின்றனர். உடல்நலமில்லாதவர்களும் இதைச் சாப்பிடுகின்றனர். உணவு வகையாகப் பயன்படுவது ஒரு புறமிருக்க, மழையால் மண் அரிப்பதைத் தடுக்கவும் கோலா மரங்கள் வைக்கப்படுகின்றன. வாழைப்பழம் இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிறது. ஐவரிகோஸ்ட்டிலிருந்து வாழைப்பழம் ஏற்றி வெளி நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களையும், கமரூன்

சிலிருந்து வாழைப்பழத்துடன் வரும் கப்பல்களையும் சிராலியோன் நாட்டினர் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிருர்கள். ஏன் எனின், குறிப்பிட்ட சில கப்பல் களில் மட்டுமே வாழைப்பழம் கெடாதபடி கொண்டு போக வசதிகள் உள்ளன.

**ஏற்றுமதிப் பொருள்கள் செய்யும் நாடுகள்:** பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா.

**ஆட்சி மொழி:** ஆங்கிலம்.

**பேச்சு மொழி:** கிரியோல். கிரியோல் என்பது ஆங்கிலம், போர்த்துக்கேயம், யாரூபா ஆகியவற்றின் சொற்கள் கலந்த கொச்சைமொழி.

**நாணயம்:** லியோன். ஒரு லியோன் ஏறத்தாழ இந்தியப் பத்து ரூபாய்க்குச் சமம்.

**அளவைகள்:** மெட்ரிக் முறை.

**மிக உயர்ந்த இடம்:** லோ மலே. (6,396 அடி)

**சிராலியோனின் பெருமை:** மேற்கு ஆப்பிரிக்காவில் பிற நாடுகளுக்கெல்லாம் முன்னரே சிராலியோனில் இரயில் போக்குவரத்து ஏற்பட்டது.

**நகரங்களில் பரவியுள்ள விளையாட்டுக்கள்:** கால்பந்து, கிரிக்கெட்.

**சிராலியோனில் மிக லாபமான தொழில்:** கள்ளத்தன மாக வைரக் கற்களைக் கடத்துதல்.

**இந்த நாட்டை ஆட்டிவைப்பவர்கள்:** நான்கு பெரிய வணிகக் குழுக்கள் சிராலியோனில் மிகவும் செல் வாக்குப் பெற்றிருக்கின்றன. இவை ஆகாயவிமானம் முதல் சிப்பு, கண்ணுடிவரை எல்லாப் பொருள்களையும் விற்கின்றனர். பனைஈச்ச எண்ணெய் முதல் பாம்புத்

தோல் வரை இவர்கள் வாங்காதபொருள் கிடையாது. இந்த நிறுவனங்களின் பெயர்களாவன: யுனைட்டெட் ஆப்பிரிக்கக் கம்பெனி, பாட்டர்சன், சோக்கோனிஸ், சி. எப். ஏ. ஓ., எஸ். சி. ஓ. ஏ.,

**சிராலியோனின் பெரும் பிரச்சினைகள்**

சிராலியோன் கல்வித் துறையில் போதிய அளவு முன்னேற்றம் அடையவில்லை.

இந்த நாட்டிலுள்ள பல்வேறு சிறு சிறு ஆப்பிரிக்க இனங்களும் இந்த நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன.

ஒரு சுதந்திர நாடாக இருப்பதற்கோ அதற்கு வேண்டிய படைகளை அமைத்துக் கொள்வதற்கோ இயலாதபடி இது ஒரு சின்னஞ்சிறு நாடாக இருக்கிறது. அண்டை நாடுகளில் திடீரென்று ஏற்படும் இராணுவப் புரட்சிகளும் அரசியல் மாற்றங்களும் இவர்களைக் கலக்கமடையச் செய்கின்றன.

அண்டை நாடான லைபீரியா அமெரிக்கரால் செல்லமாக வளர்க்கப் பெற்றுவருகிறது. புத்தம் புதிய தொழில்களுக்கு அவர்கள் கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டுகிறார்கள். அமெரிக்கர் லைபீரியாவுக்குச் செய்யும் உதவியுடன் போட்டி போட்டுக் கொண்டு ஆங்கிலேயரால் சிராலியோனுக்கு உதவி செய்ய இயலவில்லை.

**இந்நாட்டினரின் சாதனை:** போராட்டம் நடத்தாமலும தியாகம் செய்யாமலும் சுதந்திரம் பெற்றது.

**இங்குள்ள வியத்தகு உயிரினங்கள்:** பேசும் பச்சைக் கிளி, மிகக் குட்டையான எருமை மாடுகள்.

இந்த நாட்டில் மிகுதியாக இருப்பவை: சீத்தா, அத்தி, கொய்யா, புளி, வாழை, தெங்கு, கிச்சிலி, எலுமிச்சை, பனை, தேக்கு மரங்கள், மிளகு, பருத்திச் செடிகள், பூசனிக் கொடி, வான்கோழி, வாத்து, பூரான், தேள், 18 அடி நீளமுள்ள பாம்பு, கடலோரத்தில் திமிங்கிலங்களும் சுராமீன்களும்.

### பழமொழிகள்

ஆரஞ்சுப் பழத்தை எலுமிச்சைப் பழமாக யாராலும் மாற்றமுடியாது.

குரங்கால்தான் குரங்கைப்புரிந்துகொள்ளமுடியும்.

கட்டிப்போட்ட மாடு அந்த இடத்தில்தான் புல்லை மேய வேண்டும்.

எங்கே போவோம் என்பது தெரியாவிட்டால் எங்கிருந்து வந்தோம் என்பதும் தெரியாது.

### இந்த நாட்டினர் கிரியோல் மொழியில் பாடும் ஒரு தாலாட்டு

சிலிப் குடூடா பேபி கியால்
ஓபின் எய் லிலிபிட்
என்லக் மி வான் மினிட்
பிபோ யூ சிலிப்

## வரலாறு

கி. மு.

500 — ஹன்னோ என்பவன் கடற்பகுதியில் கப்பல் பயணம் செய்ததாக செவிவழிச் செய்தி உண்டு.

| | |
|---|---|
| கி. பி. | |
| *1462* | போர்த்துக்கீசியர், இப்பகுதிக்கு வந்த தாக வரலாறு எழுதி வைத்திருக்கின் றனர். அடர்த்தியான காடுகளும் ஆயிரக் கணக்கான யானைகளும் இருப்பதை அதில் குறித்திருக்கின்றனர். |
| *16, 17* ஆம் நூற்றூண்டுகள் | அடிமை வியாபாரத்திற்காக ஐரோப்பிய நாட்டு வணிகர் பலர் வந்த வண்ணமாக இருந்தனர். இப் பகுதியில் செல்வாக்குப் பெற, பிரெஞ்சு, டச்சு, பிரிட்டிஷ் நாட்டினர்க்கிடையே பெரும் போட்டியிருந்தது. யானைகளின் பற்களை வெளிநாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்புவது வழக்கமாக இருந்தது. அதை வாங்கியனுப்பும் பெரிய அலு வலர்க்கு, விலையில் 5% அன்பளிப்புக் கொடுக்கப்பட்டது. அடிமைகளை ஏற்றி யனுப்பினுல் ஒரு அடிமைக்கு ஐந்து ரூபாய் வீதம் தரகுக் கட்டணம் வழங்கப் பட்டது. |
| *1750* | இஸ்லாமிய மதம் பரவத் தொடங்கிற்று. |
| *1787* | இந்தப் பகுதியின் தலைவராய் இருந்த டோம்போ என்ற ஆப்பிரிக்க இனத் தலைவனுக்கு ஆங்கிலேயர் ரம் என்னும் குடி வகையைக் கொடுத்து 20 சதுரமைல் பரப்பை அவனிடமிருந்து பெற்றுக் கொண்டனர். அப்பகுதியில் தங்கள் நாட்டின் கொடியைப் பறக்கவிட்டனர். |
| *1788* | இந்தியாவிலிருந்து வாழை வகைகள் வர வழைக்கப்பட்டு வாழைத் தோட்டங்கள் போடப்பட்டன. |

1792 அமெரிக்க சுதந்திரப் போரில் கலந்து கொண்ட அடிமைகள் சிராலியோனில் குடியேற்றப்பட்டனர்.

பிரீடவுன் நகரம் உண்டாக்கப் பட்டது.

1808 அடிமை வியாபாரம் சட்டவிரோத மாக்கப்பட்டது. சிராலியோன் தீப கற்பம் பிரிட்டிஷ் முடியாட்சிக்கு உட் பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்டது. புதிய குடியிருப்புக்களுக்கு ஆங்கிலேயர் பெயர்கள் இடப்பட்டன.

1817 முதல் முறையாக ஒரு கிறித்தவ தேவா லயம் கட்டப்பெற்றது.

1827 கல்லூரி ஒன்று ஏற்பட்டது.

1854 பிரீடவுனில் பிரிட்டிஷ் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டது.

1911 அண்டை நாடுகளுடன் எல்லைகள் முடிவு செய்யப்பட்டன.

1930 தங்கச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

1933 இரும்புத்தாதுச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

1945 பெரிய அளவில் வைரம் தோண்டி எடுக்கப்பட்டது.

1951 அரசியல் கட்சிகள் தோன்றின.

1961 சிராலியோன் சுதந்திரக் குடியரசா யிற்று.

# லைபீரியா

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள இந்தச் சிறு நாடு ஆப்பிரிக்க வரலாற்றிலேயே வியக்கத்தக்க ஒரு சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவைச்சேர்ந்த ஒரு பகுதி என்று கருதக்கூடிய அளவுக்கு இந்த நாட்டின் வரலாறும் செயல் முறைகளும் அரசியல் அமைப்பும் பொருளாதாரப் போக்கும் உள்ளன.

## அமெரிக்காவும் ஆப்பிரிக்காவும்

அமெரிக்காவின் செல்வாக்கு உலகின் பெரும் பகுதியில் பரவி இருக்கிறது. ஆப்பிரிக்காவுக்கும் இந்தப் பொதுக் கருத்து பொருந்தும்.

ஆப்பிரிக்காவில் மத்திய தரைக்கடல் முதல் தென் ஆப்பிரிக்காவின் தென் கோடிவரை ஏராளமான நாடுகளில் அமெரிக்கர் பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்து தொழில்களை நடத்தி வருகிறார்கள். பெட்ரோலிய எண்ணெய்த் தொழிற்சாலைகளில் மூன்றில் ஒரு பகுதி அமெரிக்கக் குழுக்களால் நடத்தப்படுகின்றன.

ஆப்பிரிக்காவில் கிடைக்கும் மூலப் பொருள்களில் ஐந்தில் இரண்டு பங்கு அமெரிக்கத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுகிறது. ஆப்பிரிக்காவில் கிடைக்கும் வைரமும் பாக்ஸைட்டும் பிற புவியியல் பொருள்களும் ஐந்தில் மூன்று பங்கு அமெரிக்காவுக்குத் தான் செல்லுகின்றன. காட்மியம் என்னும் புவியியல் பொருள் உற்பத்தியில் நூற்றுக்குத் தொண்ணூற்றுறு பங்கு அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது.

அமெரிக்காவிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு விற்பனை யாகும் பொருள்களைக் கணக்கிடுவோம். இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் அதாவது 1945ல் இருந்த தைப்போல, இப்போது (1968 இறுதியில்) அமெரிக்கா வின் ஏற்றுமதி அளவு ஐந்து மடங்கு ஆகியிருக்கிறது.

போர்க் காலத்தில் அமெரிக்கத் தளங்கள் ஆப்பிரிக் காவின் பல பகுதிகளில் ஏற்பட்டன. ஐக்கிய நாடுகள் அவையில் உறுப்பினராய் உள்ள 130 நாடுகளில் மூன்றில் ஒரு பகுதி ஆப்பிரிக்க நாடுகளாக இருக்கின் றன. இக்காரணத்தால் அரசியல் துறையிலும் ஆப் பிரிக்காவில் ஏற்பட்டு வரும் பெரும் நிகழ்ச்சிகளில் அமெரிக்கா மிகவும ஈடுபட்டு வருகிறது,

மேற்கண்டவாறு அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ள ஆர்வத்துக்குச் சான்ருக விளங்கும் சின்னஞ்சிறு நாடு லைபீரியா.

### லைபீரியாவும் அமெரிக்காவும்

ஆப்பிரிக்க அடிமைகள் 16, 17, 18ஆம் நூற்ருண்டு களில் அமெரிக்காவுக்குக் கொண்டு போகப்பட்டனர். 1817 ஆம் ஆண்டு அளவில், அடிமைகள் விடுதலை செய் யப்பட்டனர். தாங்களாகவே அமெரிக்காவில் ஏதா வது ஒரு தொழில் செய்யும் திறமை அவர்களிடம் இல்லை. விடுவிக்கப்பட்ட அடிமைகளை எங்கே குடி வைப்பது என்று அமெரிக்கர் சிந்தித்துக் கொண்டிருந் தனர்.

அப்பொழுது ஆங்கிலேயர் மேற்கு ஆப்பிரிக்கா வில் அட்லாண்டிக் கரையோரத்தில், தாங்கள் விடு வித்த அடிமைகளைக் குடி வைத்து அப்பகுதியில் சிரா லியோன் என்ற நாட்டை உருவாக்கினர்.

சிராலியோனுக்கு அருகே ஒரு பகுதியை-பயனற்ற ஒரு பகுதியை—அமெரிக்கர் விலைக்கு வாங்கினார்கள். ஆப்பிரிக்கப் பழங்குடிகளில் சிலர் இதை விற்றார்கள். விலையாக அவர்கள் பெற்றுக்கொண்டது குடி வகைகளும் ஓரிரு ஆடைகளும் சீப்பும் கண்ணாடியும் சோப்பும் தான். இவற்றின் மதிப்பு 200 ரூபாய் இருக்கலாம்.

இந்தப் பகுதிக்கு லைபீரியா எனப் பெயரிடப் பெற்றது. சுதந்திரம் அடைந்தவர்கள் வாழும் இடம் என்பது இச்சொல்லின் பொருள். அமெரிக்கக் குடியரசின் தலைவரான ஜேம்ஸ் மன்ரோவின் பெயரால் லைபீரியாவின் தலைநகர் மன்ரோவியா எனப் பெயரிடப் பெற்றது.

அமெரிக்காவைப்போல் லைபீரியாவின் நாணயத்துக்கும் டாலர் என்று பெயர் வைக்கப்பட்டது. இரு வகை டாலர்களும் சமமான மதிப்புள்ளனவாகவே இருந்து வருகின்றன.

லைபீரியக் கொடியும் அமெரிக்கக் கொடியைப் போன்று நட்சத்திரங்களும் கோடுகளும் கொண்டதாக அமைந்திருக்கிறது. அரசியல் சட்டமும் அமெரிக்கச் சட்டத்தைப் பின்பற்றியதே. 1847-ல் லைபீரியா ஒரு குடியரசு நாடாயிற்று. இந்தப் பெருமையைப் பெற்ற முதல் ஆப்பிரிக்க நாடு லைபீரியா தான்.

சுரங்கங்கள், ரப்பர்த் தோட்டங்கள், கப்பல் போக்குவரத்து ஆகியவை உட்பட லைபீரியாவின் பொருளாதாரக் கட்டுக்கோப்பு அமெரிக்கர் வசமே இருந்து வருகிறது.

லைபீரியாவில் தடுக்கி விழுந்தால். அமெரிக்கத் தொழில் நுட்ப அறிஞர் அல்லது ஓர் அமெரிக்க ஆலோசகர்மீது தான் விழவேண்டும். அமெரிக்கச்

சாயல் உள்ள ஆங்கில மொழியே நாளும் பரவி வரு கிறது. சுதந்திரமான வாணிபம், தனியார் உரிமை என்ற அமெரிக்கக் கருத்துக்களே ஏற்றம் பெற்று வரு கின்றன.

''சுதந்திர தாகம் எங்களை இங்கே கொண்டு வந் தது'' என்ற சொற்றொடர்—சத்தியமேவ ஜெயத்தே என்று இந்திய அரசின் முத்திரையில் குறிக்கப் பெற் றிருப்பது போல—லைபீரிய அரசின் முத்திரையில் பொறிக்கப் பெற்றிருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால், அமெரிக்காவில் மழை பெய்தால் லைபீரியாவில் ஒருவரும் குடை பிடிப்ப தில்லை. இதற்குக் காரணம் மழை இல்லையே என்று வருந்துவதும் மழை பெய்ததும் குடையைப் பிடித்துக் கொண்டு ஓடி ஒழிவதும் அமெரிக்காவில் இல்லை. குடை பிடித்துக்கொண்டு மழையில் செல்பவரை அமெ ரிக்காவில் மிக மிக அருமையாகவே காணலாம்.

## ஆளும் இனம்

மக்களாட்சி, மக்களாட்சி என்று கூரைமீதிருந்து வாய்கிழியக் கத்தினாலும் எந்த நாட்டிலும் குறிப் பிட்ட இனத்தவர், சாதியார், மாநிலத்தார், மொழி யாளர் அல்லது குடும்பங்கள் தான் அரசியலில் அளவு கடந்த செல்வாக்குப் பெறுகின்றனர்.

லைபீரியாவில் இவ்வாறு அரசியல் அதிகாரம் பெற் றிருப்பவர்கள் அமெரிக்காவிலிருந்து வந்த நீக்ரோக் களின் வழித்தோன்றல்கள் ஆவர். இவர்கள் தொகை ஒரு லட்சத்துக்கும் குறைவு. லைபீரியாவில் வாழும் மக்கள் 20 லட்சம் பேராவர். ''எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் இந்நாட்டு மன்

னர்'' என்பதெல்லாம் மேடைப் பேச்சுக்கு மட்டுமே உரியன.

அமெரிக்காவிலிருந்து வாழ வந்த நீக்ரோக்களுக்கும் ஆப்பிரிக்காவிலேயே தொன்று தொட்டு நிலைத்து இருந்துவரும் நீக்ரோக்களுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன.

ஆப்பிரிக்க நீக்ரோக்கள் பல மொழிகளைப் பேசுகிறார்கள்.

அமெரிக்க நீக்ரோக்கள் ஒரே மொழியைப் பேசுகிறார்கள். உலக மொழியாகிய ஆங்கிலத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஸ்காட்லந்தில் கேலிக் மொழியும் இராஜபாளையத்தில் சில குடும்பங்களில் ஒருவகைத் தெலுங்கு மொழியும் சேலத்தில் சில குடும்பங்களில் சௌராஷ்டிர மொழியும் வழங்கி வருவதுபோல் ஆப்பிரிக்காவின் 800 மொழிகளும் உள்நாட்டுப் பகுதிகளில் சிற்றூர்களில் உறவினருடன் உரையாட மட்டுமே உதவும். ஆங்கிலம், பிரெஞ்சு, அரபிக், சுவாஹிலி ஆகிய நான்கு மொழிகள் மட்டுமே கால வெள்ளத்தைக் கடந்து ஆப்பிரிக்கப் பொது வாழ்வில் நிலைத்து நிற்கக்கூடும்.

ஆப்பிரிக்க நீக்ரோக்களில் ஒரு சிலர் முஸ்லீம்களாக உள்ளனர். பெரும்பாலோர்க்குச் சமயத் துறையில் ஒரு பற்றுக்கோடும் ஓர் ஊன்றுகோலும் இல்லை. இதற்கு மாறாக அமெரிக்க நீக்ரோக்கள் கிறித்தவ மதத்தினராக இருப்பதால் குறிக்கோளும் கட்டுப்பாடும் செல்வாக்கும் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

ஆப்பிரிக்க நீக்ரோக்கர்களிடையே எண்ணி முடியாத இனப்பிரிவுகள் உள்ளன. அமெரிக்க நீக்ரோக்கள் எல்லோரும் ஓர் இனமாக உள்ளனர்.

ஆப்பிரிக்க நீக்ரோக்கள் கிணற்றுத் தவளையாக இருக்கிருர்கள். அமெரிக்க நீக்ரோக்கள் உலகத் தொடர்புடையவர்களாக விளங்குகிருர்கள். பிற நாட்டாரின் வாழ்க்கை முறைகளை அவர்கள் பின்பற்றுகிருர்கள். கல்வித்துறையில் முன்னேறியிருக்கிருர்கள். நகர்ப்புறங்களில் வாழ்வதால் அரசினரின் தொடர்பும் இவர்களுக்கு இருக்கிறது.

ஆப்பிரிக்க நீக்ரோக்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள், லைபீரியாவை ஆளப் பிறந்தவர்கள் என்ற மனப்பான்மை அமெரிக்க நீக்ரோக்களிடம் நிலவி வருகிறது.

## ஆப்பிரிக்க நீக்ரோக்கள்

லைபீரியாவின் உள்நாட்டுப் பகுதிகளில் இவர்கள் வாழ்கிருர்கள். தெய், குப்பெல்லா, வை, குரு, கோல, என்ற பல இனத்தவர் இருக்கிருர்கள். இவையெல்லாம் சிறுசிறு இனங்களே. ஓரினத்தில் கூட 40,000க்கு மேற்பட்டவர் இல்லை. ஒவ்வொரு இனத்திற்கும் தனிப்பட்ட மொழி இருக்கிறது. இந்த மொழிகள் ஒவ்வொன்றிலும் பலநூறு எழுத்துக்கள் உள்ளன. பள்ளிக் கூடங்களில் முதல் வகுப்பிலேயே ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஆங்கில மொழிக்கு ஏற்றம் தரவும், கல்வி, மருத்துவத் துறைகளில் விரைந்த முன்னேற்றம் ஏற்படவும் 1960க்குப் பின் லைபீரியா அரசு பெரு முயற்சிகள் செய்து வருகிறது.

வயதான பெண்கள் நான்கு முழம் நீளமுள்ள துணிகளையே உடுப்பாக உடுத்துகின்றனர். கல்வி கற்ற பெண்கள் கௌன் அணிகின்றனர். பருவமடைந்த பெண்கள் நடனம் ஆடிப் பழகுகிருர்கள்.

பாமரரும் படித்தவரும் அமெரிக்க இசையைச் சுவைக்கின்றனர். அமெரிக்காவிலிருந்து நீக்ரோ இசைவாணரும் விளையாட்டுத் துறையில் புகழ்பெற்ற நீக்ரோ ஆட்டக்காரரும் இங்கு சுற்றுலா வருகிறார்கள்.

இங்குள்ள மக்கள் சர்க்கரைவள்ளிக் கிழங்கை அவித்துத் தின்கின்றனர். இறைச்சியும், மீனும் இவர்களுடைய விருப்பமான உணவுகள். உருளைக்கிழங்கு, புடலை, கத்திரி, வெண்டிக்காய் ஆகியவற்றைச் சேர்த்து தேங்காய் எண்ணெய்யில் தாழித்து உண்பர்.

**மதம்**

கடலோரப் பகுதியில் மட்டும் கிறித்தவ சமயம் பரவி இருக்கிறது. உள்நாட்டில் ஒரு சிறு பகுதியினர் முஸ்லீம்களாக உள்ளனர். அவர்களுடைய எண்ணிக்கை ஆண்டுதோறும் கூடி வருகிறது. இந்த மதத்தைப் பரப்புவதில் சிரியா முஸ்லிம்கள் என்று சொல்லப்படுகின்ற லெபனன் நாட்டவர் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். லைபீரியாவில் சிறு வியாபாரங்கள் அனைத்தும் இவர்களிடமே இருக்கின்றன. அரபு மொழி கற்பிக்க அரசினர் வசதி செய்து தரவேண்டுமென்று இவர்கள் சொல்லுகிறார்கள்.

**இந்தியா**

லைபீரியாவில் இந்தியர் சிலநூறு பேர் இருக்கிறார்கள். ஒரு சிலர் கடைகள் வைத்திருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத் திட்டத்தின் கீழும் ஐ.நா. மன்றத்தின் வேறுபல ஏற்பாடுகளின் படியும் இந்தியர் பலர் இங்கு பணியாற்றுகின்றனர். லைபீரியப் பல்கலைக்கழகப் பேராசிரியருள் சிலர் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்தியர்

களுக்கு லைபீரியாவில் மதிப்பும் நல்ல பெயரும் இருக்கிறது.

லைபீரியாவுக்கு இந்தியாவிலிருந்து துணி, சணல் (சாக்கு), செருப்பு, திரைப்படங்கள் ஆகியவை செல்லுகின்றன. லைபீரியாவிலிருந்து இந்தியாவுக்கு எந்தப் பொருளும் இறக்குமதியாகவில்லை.

**வேளாண்மை**

லைபீரியாவின் மண் வளம் மரவகைகளுக்கே சாலச் சிறந்தது.

நெல் வேளாண்மை ஓரளவு நடைபெறுகிறது. ஆனால் சிராலியோனைப் போல இங்கு உப்பங்கழிகளில் நெல் பயிரிடுவதில்லை. அளவுகடந்த மழை பெய்வதால் கால் நடைகளை வளர்ப்பதற்கு லைபீரியாவில் வாய்ப்பில்லை.

வாழைத்தோட்டங்களும் திராட்சைத்தோட்டங்களும் உள்ளன. இங்கு பயிரிடப்படும் கரும்பு அனைத்தும் ரம் என்னும் குடிவகை செய்யவே பயன்படுகிறது. உள்நாட்டு நெசவாளருக்குத் தேவைப்படும் பஞ்சு வழங்குவதற்கு வேண்டிய அளவு பருத்தி பயிரிடப்படுகிறது.

சாயத் தொழிலுக்கு உதவும் மரவகைகள் காடுகளில் பயிரிடப்படுகின்றன.

பயர்ஸ்டன் நிறுவனம் என்ற அமெரிக்க அற நிலையம் நடத்திவரும் லைபீரிய ஆராய்ச்சிக் கழகம் மருத்துவத் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது.

**வாணிகம்**

எந்த நாட்டினரும், தனிப்பட்ட வணிகக் குழுக்களும் போட்டியிட்டுச் சுதந்திரமாகத் தொழில்

செய்யும் சூழ்நிலையை லைபீரியா அரசு உருவாக்கி இருக்கிறது. இந்த நாட்டிலுள்ள அமெரிக்க மூலதனத்தின் மதிப்பு 600 கோடி ரூபாய். வெளிநாட்டு நாணயச் செலாவணிக்குக் கட்டுப்பாடு என்பது இங்கு இல்லை.

தலைநகரான மன்ரோவியாவில் பலகோடி ரூபாய்ச் செலவில் அமெரிக்கர் ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இது 50% ஏக்கர் பரப்புடையது. சுங்கவரி இல்லாத துறைமுகமாய் இருக்கிறது. இதனால் வெளிநாட்டு வாணிபப் பெருக்கமும் தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன.

லைபீரியாவின் பெரிய ஏற்றுமதி இரும்புத் தாது. லைபீரிய இரும்புத் தாது உலகத்திலேயே இரும்புப் படிவம் கூடுதலாக உள்ளது. லமாக்கோ கம்பெனியும் வேறு மூன்று அமெரிக்க, ஜெர்மன் நிறுவனங்களும் இரும்புத் தாது எடுக்கும் உரிமை பெற்றிருக்கின்றன. இவற்றுள் பெரியது லமாக்கோ கம்பெனியே. இக் கம்பெனியில் மூன்றில் ஒரு பங்கு லைபீரிய அரசுக்கு உண்டு. ஓர் அமெரிக்க நிறுவனமும் ஒரு சுவீடிஷ் நிறுவனமும் பிற பங்காளிகளாக உள்ளனர். இந்தக் கம்பெனி லைபீரிய அரசின் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பையும் ஓராண்டில் ஏற்றுக்கொண்டது. இந்த நாட்டின் இரும்புத் தாது அனைத்தும் அமெரிக்காவிற்கே செல்லுகிறது. இரும்புத் தாதை நிம்பா மலைச் சுரங்கத்திலிருந்து துறைமுகத்திற்குக் கொண்டுபோக இந்தக் கம்பெனியார் இரயில் பாதை அமைத்தனர். இந்நாட்டிற்குரிய இரயில் பாதை இது ஒன்றே.

லைபீரியாவின் இரண்டாவது பெரிய ஏற்றுமதிப் பொருள் ரப்பர். ஆப்பிரிக்காவில் ரப்பர் உற்பத்தியில் தலைமை தாங்கும் நாடு லைபீரியா. ஆண்டுதோறும்

130 அங்குலம் மழை பெய்யும் இடங்கள் உள்ளன. இப் பகுதியில் உள்நாட்டவர் 3,000 பேர் சின்னஞ்சிறு ரப்பர் தோட்டங்களையும் மூன்று பெரிய அமெரிக்க வணிகக் குழுக்கள் மிகப் பெரிய தோட்டங்களையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். லைபீரியாவிலுள்ள அமெரிக்க வணிகக் குழுக்களுள் பெரியது அமெரிக்கன் பயர்ஸ்டோன் ரப்பர் கம்பெனி எனப்படும். இவர்களுடைய தோட்டத்தின் பரப்பு பத்து லட்சம் ஏக்கர். ஒரு லட்சம் ஏக்கரில்தான் பயிரிட்டிருக்கிறார்கள். இவற்றிலுள்ள மரங்களின் எண்ணிக்கை ஒன்றரைக்கோடி. தங்கள் தோட்டத்து குள் இவர்கள் பின்வரும் நிலையங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

(1) நீர் மின்விசை உற்பத்தி நிலையம்.

(2) வெளிநாட்டுத் தொடர்புக்காகக் கம்பி யில்லாத் தந்தி நிலையம்.

(3) செங்கற் சூளைகள்.

(4) கோக்க கோலா உற்பத்தி நிலையம்.

(5) ரப்பர்க் கன்றுகளை வழங்கும் நிலையம்.

காப்பி, பனைச்சை எண்ணெய், கொக்கோ, கோலாக் கொட்டை, பலவகை நார்கள், வைரக் கற்கள் ஆகியவையும் ஏற்றுமதியாகின்றன.

## சில விவரங்கள்

**சூழ்ந்துள்ள நாடுகள்**

வடமேற்கே சிராலியோன், வடக்கே கினி, மேற்கே ஐவரிகோஸ்ட்டு, தெற்கேயும் கிழக்கேயும் அட்லாண்டிக் கடல்.

**பரப்பு:** 42,990 சதுரமைல்.

**மக்கள்:** இருபது லட்சம்.

**தலைநகர்:** மன்ரோவியா.

**சுதந்திரம் பெற்றுக் குடியரசு நாடானது:** *1847*

**நாணயம்:** டாலர். லைபீரிய டாலர், அமெரிக்க டாலருக்குச் சமம்.

**ஆட்சி மொழி:** ஆங்கிலம்.

**ஆழ்துறைமுகம்:** மன்ரோவியா.

**மழை:** வடமேற்குப் பகுதியில் 95 அங்குலம்.
கடலோரப் பகுதியில் 140 ,,
உயர்ந்த மலைப் பகுதியில் 200 ,,

**தட்பவெப்பம்:** *12°* முதல் *95°F* வரை

## லைபீரியா : வரலாறு

| | |
|---|---|
| *1818-1822* | அமெரிக்காவிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் வாழ்ந்த ஆப்பிரிக்க நீக்ரோ அடிமைகள் 15,000 பேர் தங்கள் முன்னோர் நாட்டுக்கு வந்து குடியேறினர். |
| *1910* | வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. |
| *1926* | ரப்பர் பயிரிடப்பட்டது. |
| *1942* | அமெரிக்கப் படைத்தளம் ஏற்பட்டது. |
| *1944* | டப்மன் என்பவர் குடியரசுத் தலைவரானார். இன்றளவும் இவரே தலைவராக உள்ளார். அமெரிக்க முதலீடு தொடக்கம். |
| *1950* | உள்நாட்டுத் தொல் மரபினருக்கும் ஆட்சியில் உரிமை வழங்கப் பெற்றது. அதுவரை அமெரிக்காவிலிருந்து வந்தவர்களுக்கும் அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கு மட்டுமே இந்நாட்டில் எல்லா உரிமைகளும் இருந்தன. |
| *1951* | அமெரிக்காவுக்கு இரும்புத் தாது ஏற்றுமதி. |
| *1953* | சுரங்கத் தொழில் வளர்ச்சி. வைரம் தோண்டத் தொடங்கினர். |

# செனகல்

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள பிரெஞ்சு நாடுகளுக்கெல்லாம் ஆட்சி முறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் தலைமை தாங்கிய நாடு செனகல். இது 1960ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றது.

மூன்று பக்கம் காம்பியா நாடும் ஒரு சிறு பக்கம் மாலியும் எஞ்சிய பகுதியில் கடலும் இந்த நாட்டின் எல்லைகளாக அமைந்துள்ளன. அண்டை நாடாகிய மாலி பெரிய நாடாக இருப்பினும் உள்நாட்டு நாடாக இருப்பதால் செனகல்தான் அந்த நாட்டை உலகத்துடன் தொடர்பு கொள்ளச் செய்யும் நாடாக விளங்குகிறது.

செனகலின் பரப்பு 76,084 சதுர மைல். மக்கள் தொகை 33 லட்சம். மக்களில் முக்கால் வாசிப் பேர் முஸ்லீம்கள். வெளிநாட்டார் ஐம்பதாயிரம் பேர். இவர்களுள் பெரும்பான்மையோர் பிரெஞ்சுக்காரர். இந்நாட்டினரின் முக்கிய மொழிகள் பிரெஞ்சு, உலோப், புலார் ஆகியவை.

தலைநகர் டாக்கார். மக்கள் தொகை ஐந்து லட்சம். இது ஒரு சிறந்த துறைமுகமாகவும் நாளும் வளர்ச்சியடையும் வணிக நிலையமாகவும் கடற்படைத் தளமாகவும் தொழில் கேந்திரமாகவும் இருக்கிறது.

இந்நகரம் பொலிவான புதுநகரமாய் இருக்கிறது. அகன்ற சாலைகள்; தேவாலயங்களும் மசூதிகளும்; அடுக்கடுக்காக உயர்ந்து கடலை நோக்கியுள்ள மாளிகைகள், பல்கலைக் கழகம், கடலை எண்ணெய் ஆலைகள் ஆகியவற்றைக் கொண்ட எழில் நகரம் டாக்கார்.

போர்க் காலத்தில் இது ஒரு பெரிய தளமாக விளங்கிற்று. அதனால் பெரிய விமான நிலையம் ஏற்பட்டது. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா நிலப்பரப்புகளிலுள்ள ஏராளமான நகரங்களுக்கு ஓய்வு ஒழிச்சலின்றி இங்கு விமானங்கள் சென்ற வண்ணமாக இருக்கின்றன இந்நகரிலிருந்து அண்டை நாடுகள் எல்லாவற்றிற்கும் நேரடி இரயில் போக்குவரத்து இருக்கிறது.

பெட்ரோலியத் தொழிற்சாலை உட்பட ஏராளமான தொழில் நிலையங்கள் ஏற்பட்டு வருகின்றன.

டாக்காரை மறந்து விட்டு அல்லது நீக்கிவிட்டு செனகல் நாட்டைப் பார்த்தால், ஒரே மணிலாக் கடலைக் காடாகக் காட்சி தருகிறது.

மணிலாக் கடலை இந்த நாட்டின் பெரிய விளை பொருள். மணிலாக் கடலை உற்பத்தி ஆகும் நாடுகளில் இது நான்காவது நாடு.

புவியியல் பொருளாக இங்கு கிடைப்பவை பாஸ்பேட், இரும்புத்தாது.

ஒலி பரப்புக்கலை இந்நாட்டில் பெரு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சி அடைவதிலும் இந்த நாடு சிறந்து விளங்குகிறது. கவிஞரும் எழுத்தாளரும் இசைவல்லாரும் எனப் புகழ்பெற்ற பல நூறுபேர் ஒவ்வொரு துறையிலும் இந்நாட்டிலுள்ளனர்.

இந்த நாட்டின் குடியரசுத் தலைவராக உள்ள செங்கோர், மதத்தால் கத்தோலிக்கர்; படிப்பாலும் பண்பாட்டாலும் பிரெஞ்சுக்காரர்; பல துறைகளில் இவர் எழுதியிருக்கின்ற நூல்களின் அட்டவணை இந்த நூலின் அளவு இருக்கும். பிரெஞ்சு நாட்டு அறிஞர்

குழுவினரால் போற்றியும் பாராட்டியும் மதிக்கப்படும் பேரறிஞர் இவர்.

செங்கோர், ஆண்டுதோறும் நீக்ரோக் கலை விழா ஒன்றை நடத்துகிருர். இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், வரலாறு போன்ற எண்ணற்ற துறைகளில் உலகெங்குமிருந்து நீக்ரோக் கலைஞர்கள் இந்த விழாக் களில் கலந்து கொள்ளுகின்றனர்.

# கினி

பிரெஞ்சு ஆட்சியிலிருந்து 1958இல் விடுதலை பெற்று கினி ஒரு குடியரசு நாடாக இருக்கிறது.

பரந்துபட்ட ஆப்பிரிக்காவில் இது ஒரு சிறிய நாடுதான் என்ருலும் இரும்பு பாக்சைட் சுரங்கங் களால் இது புகழ் பெற்றிருக்கிறது.

அட்லாண்டிக் கடற்கரையில் அமைந்து, கினி 180 மைல் நீளமுள்ள கடற்கரையைப் பெற்றிருக்கிறது. செனகல், மாலி, ஐவரிகோஸ்ட்டு, லைபீரியா, சிராலி யோன் ஆகிய நாடுகள் சூழ்ந்துள்ளன. கினியின் பரப்பு ஒரு லட்சம் சதுரமைல். இந்த நாட்டில் சில பகுதிகள் 4,800 அடி உயரம் வரை உள்ளன. இந்த மலைப் பகுதி யில் நைஜர் முதலிய ஆறுகள் தோன்றுகின்றன.

உள்நாட்டில் 60 அங்குல மழையும் கடலோரத்தில் 150 அங்குல மழையும் பெய்கின்றன.

மக்களின் முக்கியமான தொழில் வேளாண்மை. மீன் பிடிக்கும் தொழிலும் வளர்ந்துள்ளது. அரிசியும் மீனும் அன்னசிப் பழமும் மக்களின் முக்கிய உணவாக உள்ளன.

கினி, புவியியல் வளம் நிறைந்தது. இரும்புத் தாது நிறையக் கிடைக்கிறது. இங்குக் கிடைக்கும் இரும்பு, தரத்தில் மிகவும் சிறந்ததாக உள்ளது. இந் நாட்டின் பல இடங்களில் இரும்புத் தாதுச் சுரங்கங்கள் இருப்பினும் ஓரிரு சுரங்கங்களில் மட்டும்தான் இப்போது கனியை வெட்டி எடுக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் இத்தொழிலின் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது.

பாக்ஸைட் கனிச் செல்வமும் இருப்பதால் அலுமினியப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற் சாலை ஏற்பட்டிருக்கிறது பெரும்பாலான தொழிற் சாலைகள் தலைநகரான கோநாகரியைச் சுற்றியே உள்ளன. உள்நாட்டில் கண்கண் என்னும் பெரிய நகர் இருக்கிறது. இவற்றிற்கிடையே 410 மைலுக்கு இரயில் பாதை உள்ளது. இரு நகரங்களிலும் விமான நிலையங்கள் உண்டு.

கினியின் ஏற்றுமதிகள் இரும்புத்தாது, பாக்ஸைட், வாழைப்பழம், காப்பி, வைரம்.

பிரெஞ்சு ஆட்சியிலிருந்த ஆப்பிரிக்க நாடுகளில் பிரான்சுடன் எவ்வித உறவும் வைத்துக்கொள்ளாமல் துண்டித்துக்கொண்ட ஒரே நாடு கினி. உள்நாட்டுச் சண்டைகளில் மக்கள் தலைவனாக விளங்கி நாட்டுப் பாடலிலும் கூத்திலும் புகழ்பெற்ற சாமோரி என்பவரின் பேரனான செக்கோன்சுரா, கினி குடியரசின் முதல் தலைவரானார். அடிமைத் தன்மையோடு சேர்ந்த செழிப்பைவிடச் சுதந்திரத்துடன் கூடிய வறுமையே நன்று என்பது இவரது குறிக்கோள்.

## போர்த்துக்கீசியக் கினி

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் போர்த்துக்கீசிய கினியும் ஒன்று. பரப்பளவு 13,950 சதுரமைல். மக்கள் தொகை ஐந்து லட்சம். உள்நாட்டுப் பகுதிகளிலுள்ள மக்கள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றியும் மணிலாக் கடலை முதலிய கடலை வகைகளைப் பயிரிட்டும் வருகின்றனர். சின்னஞ்சிறு ஊர்களிலேயே வாழ்கின்றனர். இந்நாட்டின் புதிய தலைநகரான பிஸ்ஸா ஒரு துறைமுகப் பட்டினம். இந்தத் தீவு ஒரு பாலத்தின் மூலம் உள்நாட்டுடன் இணைக்கப் பெற்றிருக்கிறது.

ஏற்றுமதிகள் : மணிலாக்கடலை, அரிசி, ஆட்டுத் தோல்.

போர்த்துக்கீசியரிடமிருந்து விடுதலை பெற்று, அந்த நாடு ஐ. நா. மன்றத்தின் உறுப்பு நாடாகி இருக்கிறது.

## ஐவரி கோஸ்ட்

அட்லாண்டிக் கடலோரமாக உள்ள மற்றொரு நாடு ஐவரிகோஸ்ட்டு. இதன் அண்டை நாடுகள் மாலி, அப்பர்வோல்ட்டா, கானா, கினி, லைபீரியா.

ஐவரிகோஸ்ட்டுக்கும் கானாவுக்கும் இயற்கை அமைப்பு, மலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. ஆனால் கானாவை விடக் கூடுதலான பரப்பும் குறைவான மக்கள் தொகையும் பெற்றிருப்பது ஐவரிகோஸ்ட்டுக்கு இருவகை நன்மை எனலாம்.

இந்நாட்டின் மக்கள் தொகை 36 லட்சம். இதில் வெளிநாட்டார் 12,000 பிரெஞ்சுக்காரர்கள். பரப்பளவு ஒன்றேகால் லட்சம் சதுர மைல்.

இது ஒரு வளமான நாடு. சில இடங்களில் தங்கம் தோண்டுகிறார்கள். மங்கனீசு மிகுதியாக இருக்கிறது. எண்ணெய் தோண்டும் படலம் தொடங்கியிருக்கிறது.

ஏற்றுமதிகள்: உயர்ந்த காடுகளில் கிடைக்கும் பலவகை மரக் கட்டைகள், பலகைகள், காப்பி, வாழைப் பழம், அன்னாசிப் பழம், கொக்கோ, வைரக் கற்கள்.

இறக்குமதிகள்: துணி, எண்ணெய், இயந்திரங்கள், சிமிண்டு.

**தலைநகர்:** அபிட்ஜான். இந்நகரின் மக்கள்தொகை இரண்டு லட்சம். துறைமுக வசதியும் ஆகாயவிமான நிலையமும் அப்பர்வோல்ட்டா நாட்டுக்கு நேரடியான இரயில் தொடர்பும் உடையது. இங்குள்ள தொழிற் சாலைகள் பெயிண்டு, பூச்சி மருந்துகள். கண்ணாடிச் சன்னல், மூன்றொட்டுப் பலகை ஆகியவற்றைச் செய்கின்றன.

பிற நாடுகளிலிருந்து வரவழைத்த பொருள்களை இணைத்துக் கார், சைக்கிள், வானொலிப்பெட்டி ஆகியவற்றை உருவாக்கும் தொழிற்சாலைகளும் உள்ளன.

பொவாக்கே என்னும் நகரில் நெசவு, இலவம் பஞ்சு, புகையிலைத் தொழிற்சாலைகள் உள்ளன.

இந்த நாடு பிரெஞ்சு ஆட்சியிலிருந்தது. 1959இல் குடியரசாகி பிரெஞ்சு உதவியுடன் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. துறைமுக வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் ஏற்பட்டிருக்கிறது.

# மேல் வோல்ட்டா
## (UPPER VOLTA)

மேல் வோல்ட்டாக் குடியரசு ஏனைய ஆப்பிரிக்க நாடுகளினின்றும் மாறுபட்டது. இது இந்தியாவில் உத்தரப்பிரதேச மாநிலத்தைப் போன்று இருக்கிறது. உத்தரப்பிரதேசத்தைப் போலவே மேல் வோல்ட்டாவும் உள்நாட்டு மாநிலம். மக்கள் தொகை நெருக்கம், குறைந்த மழை ஆகிய பொது இயல்புகளும் உண்டு. இராஜஸ்தான் பாலைவனத்தருகே உத்தரப் பிரதேசம் இருப்பது போல, சஹாராப் பாலைவனத் திற்கருகே மேல் வோல்ட்டா இருச்கிறது. மேற்கே மாலிகூட்டாட்சியும், தெற்கே ஐவரி கோஸ்ட்டு, கானு, டோகாலந்து நாடுகளும் உள்ளன.

தலைநகரின் பெயர் ஒகதுகு. ஆட்சி மொழி பிரெஞ்சு. இது 1958 வரை பிரெஞ்சு ஆட்சியிலிருந்தது. இந்நாட்டில் ஆப்பிரிக்கக் கறுப்பரும் முஸ்லீம்களும் கிறித்தவர்களும் வாழ்கின்றனர். மக்கள் தொகை 40 லட்சம்.

உப்பங்கழிகளும் நீர்நிலைகளும் எஞ்சிய பகுதிகளில் டெஸ்ட்டி என்னும் பூச்சியும் இருப்பது இந்நாட்டின் சிக்கல்களாக இருக்கின்றன. மணிலாப் பயிரிடுவதும் ஆடுமாடு வளர்ப்பதும்தான் இங்குள்ள தொழில்கள். இந்த ஏழை நாடு எப்படித்தான் அதன் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ளப் போகிறதோ தெரியவில்லை. வெள்ளாட்டுத் தோலால் செய்த பெரிய பைகள் நிறையத் தண்ணீர்கட்டி தலையில் சுமந்து தெருத்தெரு

வாக விற்பது இந்த நாட்டில் வழக்கம். அண்டை நாடுகளான கானுவிலும் ஐவரி கோஸ்ட்டிலும் உள்ள காப்பி, கொக்கோத் தோட்டங்களில் வேலை பார்த்து வயிறு வளர்க்க மேல் வோல்ட்டா மக்கள் ஏழு லட்சம் பேர் நிலையாக அந்த நாடுகளிலேயே தங்கிவிடு கின்றனர்.

## டோகோலந்து

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள மற்றொரு சின்னஞ் சிறு நாடு டோகோ. இந்த நாட்டுக்கும் தகோமிக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

தகோமி பிரெஞ்சு ஆட்சியிலிருந்தது. டோகோ வின் ஒரு பகுதி ஜெர்மன் ஆட்சியிலிருந்தது; மற்றொரு பகுதி பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்தது.

தகோமியின் அண்டைநாடு நைஜீரியா. டோகோ லந்தின் அண்டை நாடு கானு. இந்தப் பெரிய நாடு களால் தங்களுடைய சுதந்திரத்திற்குக் கேடு வருமோ என்ற அச்சம் இந்த இருநாடுகளிலும் நிலவுகிறது. அயலவர் ஆட்சியிலிருந்தபோது ஐரோப்பியர், ஆப் பிரிக்கர் என்ற பூசல் இருந்தது, விடுதலையடைந்த பிறகு பூசல் வேறுவகையாக இருக்கிறது. பெரிய மீன் தன்னை விழுங்கிவிடுமோ என்ற கவலை சிறிய மீனுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்க நாடுகளை இவ்வாறு தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் ஐரோப்பிய வல்லரசுகள் தங்களுடைய ராஜதந்திரத்தை நன்கு பயன் படுத்துகின்றன.

தகோமியும் டோகோலந்தும் பொருளாதார மேம் பாட்டுக்கு பிரான்சை நம்பியிருக்கின்றன. காடுகளும்

மண் மலைகளும் இருநாடுகளிலும் இருக்கின்றன. தகோமியைப் போல டோகோலந்திலும் பனை ஈச்சை எண்ணெய், சோளம், சர்க்கரைவள்ளிக்கிழங்கு, மொச்சை ஆகியவையே பெரிய உற்பத்திகள்.

டோகோலந்திலுள்ள லோமே என்னும் நகரம் கானா நாட்டு எல்லையிலிருந்து இரண்டு மைல் தொலைவிலிருக்கிறது.

டோகோலந்தில் காணத்தக்கவை பாஸ்பேட் சுரங்கங்களும் ஜெர்மன் கட்டிடக் கலையின் சின்னமாய் விளக்கும் தேவாலயங்களும்.

# தகோமி

மேற்கு ஆப்பிரிக்காவில் 12 ஆம் நூற்றாண்டு முதல் புகழ்பெற்றுள்ள ஓர் உள்நாட்டுத் தலைவன் பெயரால் ஏற்பட்டது தகோமி. 1851 முதல் பிரான்சுக்கும் தகோமிக்கும் இடையே வாணிபம் நடைபெற்றது. வழக்கம் போல, வியாபாரிகளாக வந்தவர்கள் ஆட்சியாளர்களாக மாறினார்கள். 1960இல் இந்த நாடு சுதந்திரக் குடியரசாயிற்று.

இந்த நாடு கடலோரமாக அமைந்த நீண்ட கோடு போல் இருக்கிறது. பரப்பளவு 44, 713 சதுரமைல். மக்கள் தொகை 24 லட்சம். தமிழ்நாட்டு அளவு பரப்பில் தமிழ் நாட்டில் பதினெட்டில் ஒரு பங்கு மக்களே வாழ்கின்றனர். பனைஈச்சை மரங்களும் தென்னந்தோப்புக்களும் மழை மிகுந்த காடுகளும் இந்த நாட்டிற்கு வருவாய் தருகின்றன.

கடற்கரையின் நீளம் 70 மைல். நில அமைப்பும் மண்வளமும் நைஜீரியாவைப் போன்றவை.

**ஏற்றுமதிகள்:** காப்பி, மணிலாக்கடலை, பருத்தி, வெள்ளாடு, செம்மறி ஆடு.

**தலைநகர்:** போர்ட்டநோவோ. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பறங்கிப்பேட்டை என்னும் ஊரின் ஆங்கிலப் பெயரும் போர்ட்டநோவோ என்பதாகும். இச் சொற்றொடருக்குப் புதிய தலைநகரம் என்று பெயர். இந்த நாட்டில் கோட்டநோவோ என்னுமிடத்தில் ஓர் ஆழ்கடல் துறைமுகம் இருக்கிறது.

கிழக்கே நைஜீரியா, மேற்கே டோகோலந்து ஆகிய நாடுகளும் தெற்கே அட்லாண்டிக் கடலும் வடக்கே நைஜர் ஆறும் தகோமியைச் சூழ்ந்துள. நைஜர் ஆற்றின் எதிர்க்கரையில் இருப்பது நைஜர்க் குடியரசு. படகுகளில் காரை ஏற்றிக் கொண்டு ஆற்றைக் கடந்து அந்த நாட்டை அடையலாம்.

தகோமியின் வரலாற்றில் பதினெட்டாம் நூற்றாண்டுவரை பெண்கள் படையில் சேர்ந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அரசன் இறந்தபோது மனைவிமார் பலரையும் வேலையாட்களையும் மகளிர்ப் படையினரையும் கொன்று குவித்து உடன்கட்டை ஏறச் செய்தனர்.

கோவாவை இந்திய நாட்டோடு நாம் இணைத்துக் கொண்டிருப்பது போல் அஜீடா என்று சிறு தீவைத் தகோமி நாட்டினர் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். அட்லாண்டிக் கடலிலுள்ள இத்தீவின் பரப்பு ஒரு சதுர மைல். ஒரு கோட்டையும், அதனுள் பனைஈச்ச மரங்களும் போர்த்துக்கீசியத் தூதுவரின் மாளிகையும் இருந்தன.

# மாலி

நான்காம் நூற்றுண்டு முதல் பதினைந்தாம் நூற்றுண்டு வரை வடமேற்கு ஆப்பிரிக்காவில் ஒரு பேரரசாக விளங்கிய நாடு மாலி. டிம்பக்டூ என்று குறிக்கப்படும் புகழ்பெற்ற நகரம் இந்நாட்டிலுள்ளது. ஒதுக்குப்புறத்தில்இருக்கிற இந் நகரம் பதினுன்காம் நூற்றுண்டில் வணிகநிலையமாகவும் இஸ்லாமியக் கலைக்கும் கல்விக்கும் கருவூலமாகவும் விளங்கிற்று. மண் சுவர் வைத்துப் பல தலைமுறைகளுக்குமுன் கட்டப்பெற்ற மசூதிகளும் இன்றும் பொலிவுடன் உள்ளன.

யாருக்கும் தெரியாத ஊர், அறிமுகமில்லாத இடம், மக்கள் நடமாட்டமில்லாத பாலைவனப் பகுதி என்ற கருத்தில் டிம்பக்டூ என்ற சொல் இலக்கியத்திலும் உலக வழக்கிலும் கையாளப்படுகிறது.

மாலி, அளவில் சுருங்கிச் செல்வாக்கும் இழந்து சூடான் என்னும் பெயரில் பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாயிற்று. 1960 முதல் இது சுதந்திரக் குடியரசாக இருந்து வருகிறது. பரப்பு 4,65,050 சதுர மைல். மக்கள் 40 லட்சம். சஹாராப் பாலைவனத்துக்கும் அல்ஜீரியா, மாரிடேனியா, செனகல், கினி, ஐவரி கோஸ்ட்டு, மேல் வோல்ட்டா, நைஜீரியா நாடுகளுக்கும் நடுவே மாலி இருக்கிறது. தலைநகர் போமாகோ.

நைஜர், செனகல் ஆறுகள் பாய்கின்றன. விளைபொருள்கள் நெல், பருத்தி, சோளம், நவதானியம், மணிலாக்கடலை.